
www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ருட்டிங்கில் தரமிகு நவீன ஜவளி மாளிகை

# Rani

## FASHION DESIGN & TAILORING



**SAREE BLOUSES,**
**SALWAR KAMEEZ,**
**PARTY FROCKS,**
**MATENITY DRESSES,**
**ALTERATIONS**
**& EMBROIDERY,**
**WEDDING CARDS**



**Exclusive showroom for quality Sarees**

உங்கள் விருப்பத்திற் கேற்ப
அழகிய டிசைன்களில் சாறி
பிளவ்ஸ் தைப்பதற்கு
ஞாபகத்தில் இருக்க
வேண்டிய ஒரே இடம்.

**உங்கள் அவசர தேவைகட்கு
24 மணிநேர ஒடர்களும் ஏற்றுக்
கொள்ளப்படும்.**

**எம்மிடம் புடவைகள் வாங்கும்
ஒவ்வொருவருக்கும் ஒரு சாறி பிளவுஸ்
இலவசமாக தைத்துக் கொடுக்கப்படும்**



பட்டு சாறிகள், பிளவுஸ் துணி
வகைகள் கூறை சேலைகள்,
ஷல்வார் கமிஸ் வகைகள்,
குழந்தைகளுக்கான ரெடிமேற்
ஆடைகள்

**33, UPPER TOOTING ROAD, LONDON SW17.**

**Tel:- 0181- 648 2788 0181- 767 7627**

www.tamilarangam.net



# உள்ளே...



தடுமாறும் சந்திரிகா அரசு

பக்கம் – 4



இந்தியாவின் புதிய அரசு

பக்கம் – 6



நாடும் மக்களும்-
ஜேர்மனி

பக்கம் –21



லண்டனில் அதி உயர்
கௌரவ விருதைப்
பெற்றுக் கொண்ட
தமிழர்

பக்கம் – 22



1998 உலகக்கிண்ண
உதைபந்தாட்டம்

பக்கம் – 24



தமிழரின் சுய நிர்ணய
உரிமையை வலியுறுத்தி
டென்மார்க்கில் சர்வதேச
மாநாடு

பக்கம் – 26



40 ஆண்டுகால
விண்வெளி

பக்கம் – 41



பனிக்கட்டியில் சாகசம்

பக்கம் – 44



சாதனையை
நோக்கி மருதநாயகம்

பக்கம் – 46

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net



**PAALAM**

Tamil Monthly Magazine

SE - nr. 20 20 05 45

மார்ச் 1998

**பாலம்**

சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை

**முகவரி:**
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96

ஒரு ஆண்டுக்கான சந்தா

| | |
|---|---|
| பிரான்ஸ் | – 180 FFr |
| சுவிஸ் | – 48 Sfr |
| ஜேர்மனி | – 50 Dm |
| டென்மார்க் | – 200 Dkr |
| நோர்வே | – 200 Nkr |
| இங்கிலாந்து | – 20 £ |
| கனடா | – 45 C$ |
| அவுஸ்ரேலியா | – 45 A$ |

ஏனைய நாடுகள் –20 £

Paalam Publications
A/C No: 3406689468
DEN DANSKE BANK
Østergade 1
7430 Ikast
DENMARK

அச்சுப் பதிப்பு
**வாசன் அச்சகம்**
லண்டன்

# நெடுந்தூரம் நடக்கவேண்டியிருக்கிறது

புலம்பெயர்ந்து வாழும் நம் தமிழீழ மக்களின் வாழ்க்கை நேரத்துடன் போராடிக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளில் ஒவ்வொரு நிமிடமும் நூறால் பிரிக்கப்பட்டு, "சதமநிமிடம்" என்று பெயரிடப்பட்டு வேலையும், சம்பளமும் கணிக்கப் படுகின்றன. இப்போதெல்லாம் வாழ்வைக் கொண்டு செலுத்த ஒருவேலை போதியதாக இல்லை. இந்த நிலையில் தேடலுக்குரிய நேரமும் வேலைத் தலத்திலேயே விற்பனையாகிவிடுகிறது.

இப்பொழுது உங்கள் கையிலிருப்பது பாலம் மார்ச் இதழ். நமது மக்களுக்காக நாம் ஓய்வொழிச்சலின்றித் தேடிக்கொண்டிருக்கிறோம் என்பதை பாலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் நீங்கள் காண வேண்டும்; காண்கிறீர்கள்.

தேடி, தேடியதைத் திரட்டித் தருவதால் மட்டும் விடயம் முடிந்துவிடுவதில்லை. எந்தவொரு உற்பத்தியும் மக்களைச் சென்றடையும் போதே அதன் உயிர்ப்பு ஜீவனுள்ளதாகிறது. பாலம் உங்கள் கையிலிருப்பது மகிழ்வு தருகிறது. உங்களைப்போல ஆர்வமுள்ள மேலும் பலரிடம் பாலத்தைப் பரவலாக்க வழி செய்வீர்களென நம்புகிறோம்.

நமது தேடலுக்குள் அகப்படாது எண்ணற்ற விடயங்களும் எண்ணற்ற திறமைசாலிகளும் இருப்பதை அறிவோம். நீங்கள் முன்வருவதே எமது பணியை இலகுவாக்கும். நமது ஒவ்வொருவரது தேடலும் பரிமாறப்பட வேண்டும். அதற்குப் பாலம் பயன்படும். பொழுதுகள் சூறையாடப்படுவதால் முதலில் எரிந்து போவது வாசிப்பிற்கான நேரமே. அறிவின் மலர்விற்கு அடிப்படையான வாசிப்பு நம்மிடையே மறுபடியும் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். நிறையச் சிந்திக்கவும், நடக்கவும் வேண்டியிருக்கிறது. அடுத்த இதழில் மேலும் ஒருபடி வளர்ந்திருப்போம் என்ற நம்பிக்கையுடன்.

**மொழியும் கலையும், கலாச்சாரமும் வளம்பெற்று, வளர்ச்சியும், உயர்ச்சியும் அடையும் பொழுதே தேசிய இனக்கட்டமைப்பு இறுக்கம் பெறுகின்றது; மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மைபெறுகின்றன; தேசியநாகரீகம் உன்னதம் பெறுகின்றது.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போரும் புத்தாண்டுக் கனவும்

"நமது கையிலிருப்பதோ ஒரு கோப்பை சோறு அதை எப்படிப் பிரிப்பது?" என்ற கேள்விக்குரியவர் முன்னாள் சிறீ லங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டார விஜதுங்கா. இப்போது சித்திரை வருடப் பிறப்பிற்கு பால்ச் சோறு தின்னலாமென்ற ரத்வத்தையின் அறிவுறுத்தல் வந்ததும் பழைய டிங்கிரி பண்டாவின் உதாரணங்கள் நினைவிற்குள் வந்து விடுவது தவிர்க்கமுடியாததாகிறது. தமது கிடுக்கிப் பிடிக்கும் போருபாயம் தொடர்ந்தும் கானல்நீராகி வருவதால் காலக் கெடுக்களை மாற்றிப்போடும் வெற்றுப் போர்களையே சந்திரிகா அரசு நீட்டிச் செல்வதாகத் தெரிகிறது. கிளிநொச்சித் தாக்குதலும், பருத்தித்துறைக் கடலில் கரும்புலிகளின் தாக்குதலால் மூழ்கிப்போன கப்பல்களும் போர் முஸ்தீபுகளைச் சீர்குலைத்துவிட, இப்போது கனவுகளைப் புத்தாண்டுக்குள் இழுத்துச் சென்றிருக்கிறார்கள்.

சூரியக்கதிரிலிருந்து ஜெயசிக்குறுவரை சிறீலங்கா அரசு நடத்தும் போரில் இருபெரும் வியூகங்களே வகுக்கப்பட்டிருந்தன. பழைய யுத்த நூல்களின் வழி பார்த்தால் அவை புதுமைகள் எதுவும் கொண்டனவல்ல என்பது தெரிய வரும். சூரியக்கதிரின் பெரும்படை நகர்வு கருடவியூகம் போன்றதென்றால் மக்களுடன் புலிகள் வெளியேறிய காட்சி கோழி தன் குஞ்சுகளுடன் வெளியேறியதைப் போன்றதாகும். ஆனால் ஜெயசிக்குறு கருடவியூகமல்ல; அது வளைந்து செல்லும் சர்ப்பவியூகமாய் அமைந்திருந்தது. முல்லைப் பெருநிலத்தை வட்டமாக வளைப்பது அதன் கபட நோக்கம். ஆனால் "பாதை திறப்பு" என்பது அதற்கு வைக்கப்பட்டிருந்த நல்லபெயராகும். ஆயுதங்களும் ஆட்களும் புதியதாக இருந்தாலும்; காற்றையும் மழையையும் போல போர் என்பதும் பழையதுதான். வியூகங்களின் வளர்ச்சியே போரின் வரலாறாகும். அதை அறிவோர் சிறு படைகளால் பெரும்படைகளை வெற்றி கொள்ள முடியும் என்ற உண்மையையும் அறிதல் முடியும். சரியான நேரத்தில் சரியான எதிர்வியூகத்தை அமைக்கும் திறமையுள்ளவர்கள் புலிகள் என்பது அவர்களது வெற்றிகளிலிருந்து அறிந்துகொள்ள முடியும்.

தமிழர்களைக் கூனிக்குறுகி நடக்கும் அடிமைகளாகவே பார்த்துப் பழகிப்போன சிறிலங்கா அரசு இலகுவான களமாக எண்ணி வெற்றிக் கனவுகளுடனேயே முன்யோசனையற்ற போரில் குதித்தது. தமிழர்கள் அடிமைகளாக நெரிக்கப்பட்டாலும் போர்க்கலையென்பது அவர்களின் மூதாதையருக்குரியது. பிறவியின் ஜீவன்களுடனேயே மறைந்து கிடந்திருக்கிறதென்ற உண்மையை போர்க்களத்தில் தமிழர்களைக் குதிக்க வைத்த பின்னர்தான் சிறீலங்கா அரசு கண்டு கொண்டது. கடலிலும் தரையிலும், ஆகாயத்திலும் புலிகளின் சிறு படைப்பிரிவுகள் ஆடும் அலாதியான ஆட்டமும், அச்சமின்றி அவர்கள் நடத்தும் போரும் வியப்பூட்டுவதாயுள்ளன. "வலமும் இடமுமாக வாங்கும் அலைகளுக்குள் இந்தச் சின்னஞ்சிறு தமிழ்ப் புலிகள் இவ்வளவு சுளுவாக எப்படித்தான் காணாக் கம்பு பிடிக்கிறார்களோ என்பதை அறிய முடியாது திகைக்கிறேன். இது நமது மூதாதையரின் வழிவந்துள்ள செல்வமே!" என்று கூறினார் தமிழீழத்தின் பழம்பெரும் கடலோடியொருவர். கடலில் மட்டுமல்ல தரைப்போரிலும் பண்டைத்தமிழர் வீரம் தோன்றாத்துணையாக



www.tamilarangam.net



நின்று புலிகளுக்குத் தோள்கொடுத்து வருகிறது. இந்த நிலையில் போரிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதைத் தவிர சிறீலங்கா அரசிற்கு வேறுவழிகள் இருத்தல் முடியாது. இப்போதுள்ள சூழலில் போரிலிருந்து விடுபடுவதென்றாலும் கூட வேகமாகப் போர் புரிவதைத் தவிர வேறுவழியற்ற நிலையே கண்முன் தெரிவதால் போரை மேலும் வேகப்படுத்தியுள்ளனர். இதனாலேயே சமாதானத்திற்கான போர் என்ற புதிய சொற்பதத்தை அவர்களது கனவு மனம் இலகுவாகக் கண்டுபிடித்தது.

எப்போதுமே எண்ணெயாக இருக்கும் இராணுவத்தை நீராக இருக்கும் மக்களுக்குள் கரைத்தல் முடியாது. எண்பதுகளில் விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டை விடுவித்தபோதும் இதையே அவதானிக்க முடிந்தது. இப்பொழுது யாழ்.குடாநாட்டில் நிலை பெற்றிருக்கும் இராணுவமும் முன்னயதைப் போன்ற இராணுவமே. முன்போல முகாம்களிலேயே பெரும்பாலும் முடக்கப்பட்டுள்ளனர். ஜப்பானிலுள்ள அமெரிக்க இராணுவத்தினரையே அங்கிருந்து வெளியேறும்படி ஜப்பானிய மக்கள் கோஷமிடுவதை இங்கு உதாரணமாகப் பார்த்தால் இதன் தாற்பரியத்தைப் புரிந்து கொள்ளலாம். எனவேதான் சிறீலங்கா பெரும் படைகளை வைத்திருந்தும் மக்களோடு கலந்திருக்கும் புலிகளை சுற்றிவளைத்து, முகாமைப் படுத்திவிட முடியாதிருக்கிறது. இதை ஒரு இலட்ச்சத்திற்கும் மேற்பட்ட இந்தியப் படை களே நிறைவேற்ற முடியாதுபோனது தெரிந்ததே. ஆகவே இது வெற்றிபெற முடியாத போர் என்று சிங்களப் போர் ஆய்வாளர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

அப்படியானால் இந்தப்போரை ஏன் நடத்தவேண்டும்? முன்னரே குறிப்பிடப்பட்டதைப்போல ஒன்று போரிலிருந்து விடுபட, மற்றையது தமிழ்மக்களைத் தொடர்ந்தும் அடிமைகளாகவே வைத்திருந்தது மாகிய இரு தலைமை நோக்கங்களுக்காகவே. இந்தியாவில் தமிழர்களும் இதர இனங்களும் மாநில அதிகாரங்களுக்குட்பட்டு வாழவில்லையா? அதுபோல; முடிந்தால் அதைவிடக் குறைவு



பட்ட அதிகாரங்களுடன் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்திவிட வேண்டும். அதை ஏற்பதைத் தவிர மாற்றுவழியற்ற நிலைக்கு தமிழினத்தை தள்ளிவிடவும் வேண்டும் என்ற இலக்குகளுடன் தொடர்கிறது சமாதானத்திற்கான போர். அதேவேளை தீர்வுத்திட்டத்தை ஏற்றுப்பார்த்தால் என்ன என்ற நப்பாசையுடைய குழுவினரும் இல்லாமல் இல்லை. இது சரியா என்பதை அறியவேண்டுமானால் இந்திய மாநிலங்களுக்குள்ள அதிகாரமென்ன அவை தமிழ் மக்களுக்கும் பொருந்திவருமா



என்பதை சட்டங்களின் வழியே நோக்குதல் வேண்டும். ஈழத்தமிழர் இன்றுள்ள நிலையில் தீர்வுத்திட்டம் எவ்வளவு பொருத்தமற்றதென்பதைப் புரிந்து கொள்ள உதவலாம்.

இந்திய அரசியல் சட்டப்படி மாநில அரசுகள் யாவும் பெருமைக்குரிய நகராட்சிகள்தான் இவற்றை மைய அரசுகள் விரும்பும் போதெல்லாம் கலைத்துவிடலாம். மேலும் 1958, பின் 72–ம் ஆண்டுத் திருத்தங்களின்படி இந்தியமைய அரசு மாநிலங்களின் ஒரு பகுதியை "பதற்றமான பகுதி" யென அறிவிக்கமுடியு. அப்படியறிவித்தால் பின் அப்பகுதிகளின் மீது மாநில அரசின் அதிகாரம் செல்லுபடியற்றதாகிவிடும். இராணுவம் தேவை கருதினால் சுடவும், ஐந்து பேருக்குமேல் கூட்டம் கூடினால் கைதுசெய்யவும் உரிமையும் பெற்று விடுகிறது. இத்தகைய சூழலை உடைய தீர்வுத் திட்டத்தை தமிழீழ மக்கள் இனி விரும்புவார்களா என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எனவேதான் சுயநிர்ணயமுள்ளதோர் தீர்வையே அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அடுத்த தேர்தலை வெற்றிகொள்ள ஆசைப்படும் ஒரு அரசால் இதை நிறைவேற்ற முடியுமா? என்பது கேள்விக்குறி. எனவேதான் போரைத் தொடர்கிறது சிறீலங்கா அரசு. எனினும் "நியாயமற்ற போர் வெற்றிபெற்றதாகச் சரித்திரமில்லை" என்ற உண்மையை அறிந்தால் இந்தப்போர் சிங்களப் பேரினவாதத்திற்கு பாதகமான முடிவையே தரும். அடுத்த தேர்தல்வரை நீட்டி வாசிப்பது நமக்கே ஆபத்தானதென்பதை சிறீலங்கா அரசு விளங்கிக் கொள்ளுமா?

**விசித்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


## பாரதீய ஜனதா அரசு

# நிதானமாக வைத்துள்ள முதலாவது அடி!



இந்திய அரசியலில் தேர்தல் முடிந்து ஒரு மாத காலம் ஓடிவிட்டது. தேர்தலின்பின் மூன்று முக்கிய அணிகளும் எப்படியாக வியூகம் வகுத்துள்ளன என்பதே அவர்களுடைய அரசியல் எதிர்காலத்தைச் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. இம் மூன்று அணிகளில் முதலாவதும், முக்கியமானதுமான அணி பாரதிய ஜனதாக் கடிசிக் கூட்டணியே. இப்போது இவர்கள் ஆட்சிபீடம் ஏறிவிட்டனர். ஒருமாத காலத்திற்குள் அவர்கள் எடுத்துப் போட்ட முதல் அடியில் சில குறிப்பிட்டுக் கூறக்கூடிய காரியங்கள் தென்படுகின்றன. அடுத்து காங்கிரசைப் பொறுத்தவரை சோனியா காந்தி கட்சித் தலைமைப் பதவியை ஏற்றிருக்கிறார். சோனியாவின் வரவிற்குப் பச்சைக் கொடி காட்டுவதாக பலதடவைகள் கூறியிருக்கிறார் கேசரி. ஆனால் சோனியா அதில் வேகம் காட்டியிருக்கவில்லை. இப்பொழுது கேசரி காட்டியிருக்கும் விருப்பீனம் அவரின் தாமதத்திற்கான காரணத்தை விளக்குவதாயுள்ளது. ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை அவர்கள் தம் ஆணிவேராக உள்ள மாநில ஆட்சிகளைத் தக்கவைப்பதிலேயே கவனம் செலுத்த வேண்டிய நிலை. ஆட்சிபீடம் ஏறிய பின்பே என்.டி.ராமராவின் அஸ்தியைக் கரைப்பேன் என சபதமெடுத்திருக்கும் சிவபார்வதியின் எதிர்ப்பு ஆந்திராவில் சந்திரபாபுநாயுடுவை மெல்ல அசைத்திருக்கிறது. ஐந்தாண்டுகால ஆட்சிப் பருவம் ஓர் மாளிகை என்றால் அதன் அத்திவாரமாக அமையக்கூடிய முதல் மாதத்தில் அனுமானிக்க முடிந்த முக்கோண அரசியல் நிலை இப்படியாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு இப்படிப் பட்ட கோணங்கள் சுவையானவையாக அமைவதில்லை. ரஜனிகாந் நடந்து முடிந்த தேர்தலில் கலைஞர் மூப்பனார் ஆகியோரின் வெற்றிக்கு ஏன் முன்னரைப் போல உறுதியாகத் தோள் கொடுக்கவில்லை என்பது அவர்களிடையே முக்கியமான கேள்வியாக உலாவருவதை இன்றும் அவதானிக்க முடிகிறது. ரஜனிகாந்தும் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் போல்வே திரைப் படத்தின் மூலமாக தனது அரசியல் கருத்துக்களைக் கூறுபவர் என்பது அனைவரும் அறிந்ததே. ரஜனியின் ஆதரவு பெற்று தேர்தலில் போட்டியிடுவோர் பற்றி அருணாச்சலம் படத்தில் அவர் அமைத்துக் கொண்டுள்ள காட்சியின் கருத்து இப்போது பலரது சிந்தனையைத் தூண்டுவதாயுள்ளது. அப்படத்தை மறுபடியும் பார்ப்போர் அவருடைய இப்போதைய அரசியல் நிலைப்பாட்டுடன் ஏது எவ்வளவு தூரம் பொருந்துகின்றதென்பதை ஒப்பிட்டுப் பார்த்தல் முடியும். அது முழுமையாகப் பொருந்தி வரா விட்டாலும் சினிமாமூலம் தான் தேடிக்கொண்ட செல்வாக்குக் காற்றைப் பயன்படுத்திக்கொண்டு, மற்றைய அரசியல் கப்பல்களை தமது பாய்களை அகலவிரித்து நெடுந்தூரம் அரசியல் பயணம் செய்யவிடுவது மதியூகமானதா என்பதை அவர் கணக்குப் பண்ணாமலிருக்க முடியாது. அந்தக் கணக்கிற்கு ஓர் விடை வேண்டும். அதுவே ரஜனியின் இன்றைய அரசியல் நிலைப்பாடாகத் தெரிகிறது. அவரின் அடுத்த திரைப்படம் வந்தால் இதற்கான பதில் மேலும் விளக்கமாகக் கிடைக்கலாம். மேலும் கோபர்ல்சாமி மந்திரிப் பதவி பெறத் தவறியது ஏன்? அவர்



**ஆட்சி மாற்றம் ஆரோக்கியம் தருமா? உலகம் பார்த்திருக்கிறது.**

www.tamilarangam.net



வெளியிலிருந்து ஏன் ஆதரவு கொடுக்க வேண்டும் என்பது பற்றியும் தமிழ் நெஞ்சங்கள் அறியத் துடிப்பது வாஸ்தவம்.

இவைகளை இப்படியே விடுத்து பாரதீய ஜனதாவின் மீது பார்வையை வீசுவோமானால் அவர்கள் வைத்த முதல் அடியிலேயே நிதானம் தெரிகிறது. முதலில் சுப்பிரமணிய சுவாமிக்கு மந்திரிப் பதவி தரவிரும்பவில்லை என்பதை அவர்கள் வெளிப்படையாகக் கூறியது. கலைஞரின் ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய மறுத்தமை ஜெயலலிதாவின் கோரிக்கைகளை வெளியிட்டமை போன்றன அவர்கள் தமது எதிர்கால அரசியல் மீது கொண்டுள்ள அக்கறையையே காட்டுகிறது. மேலும் ஜெயலலிதாவின் வழக்குகள் தொடர்பாக நீதிமன்றமே உயர் அதிகாரம் கொண்டதென்ற அவர்களின் அறிவிப்பும் அப்படிப்பட்டதே. இருப்பினும் இடையில் ஓர் கொசுறுச் சிந்தனையையும் கோடிடாமல் இருக்க முடியவில்லை. தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி வெற்றியை நோக்கிச் சென்றவேளை அவர்களுடைய கட்சியின் மாநில அரசொன்றை ஐக்கிய முன்னணியின் காபந்து அரசு டிஸ்மிஸ் செய்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக வாஜ்பாய் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார். இந்த உண்ணாவிரதம் அடுத்த கட்டமாக நடைபெறவிருந்த வாக்களிப்பில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உதவியிருக்கலாம். ஆனால் இதில் இன்னொரு விடயமும் இருக்கிறது. உண்ணாவிரதமிருந்த கையோடு ஆட்சிபீடமேறிய பாரதீய ஜனதா தனக்கெதிரான மற்றைய மாநில அரசுகளை உடனடியாக டிஸ்மிஸ் செய்ய முற்பட்டால் அவர்களின் நோக்கம் முன்னுக்குப் பின் முரணானதென விமர்சிக்கப்பட்டுவிடும். மேலும் தமிழக அரசு தொடர்பாக ஜெயலலிதாவின் வேண்டுதலை அவர்கள் ஏற்கமுடியாமல் போனதற்கு ஏற்கனவே இப்படியாக ஆடப்பட்டிருந்த அரசியல் சதுரங்கமும் ஓர் காரணமாக இருந்திருக்கலாம்.



அருணாச்சலம் திரைப்படம் சொல்லும் ரஜனியின் அரசியல் நிலைப்பாடு.

மேலும் கோவையில் வெடித்த தொடர் குண்டு வெடிப்புக்களால் சுமார் 80 பேர் வரை இறந்து போனதும் 180 பேர்வரை காயமடைந்ததும் அமைதிப்பூங்காவான தமிழகத்தை அமைதியிழக்கச் செய்துவிட்டன. எனவே. தி.மு.கவை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென்ற கோஷங்களும் தொடர்கின்றன. இது தொடர்பாக அல் உக்மா, ஜிசாத் என்னும் இரு முஸ்லீம் தீவிரவாதக் குழுக்களைத் தடை செய்திருக்கிறது தமிழக அரசு. ஆனால் இதற்கு பாரதீய ஜனதாவுடன் நட்புள்ளதும் மகாத்மாகாந்தி கொலைக்குப் பின் தடைசெய்யப்பட்டதுமான ஆர்.எஸ்.எஸ். இயக்கமே காரணமென குற்றம் சாட்டினார் சீதாராம் கேசரி. எனவே கோவைக் குண்டு வெடிப்பு தி.மு.கவை டிஸ்மிஸ் செய்ய போதிய காரணமல்ல என்றளவில் அடக்கி வாசிக்கப் பட்டுவிட்டது.

இவை இப்படி இருந்தாலும் உலக நாடுகளைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா அரசு குறித்து இப்படிப்பட்ட கோணங்களில் சிந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய ஆட்சி வெளிநாட்டு முதலீடுகளுக்கு வாய்ப்பானதா என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு. பழைய திறந்தவெளிப் பொருளாதாரக் கொள்கையையே தாமும் கடைப்பிடிக்கவிரும்புவதாக அவர்கள் அறிவித்திருப்பது உலக நாடுகளுக்கு திருப்தி தருவதாகவே உள்ளது. வெளிநாட்டு முதலீடுகளின் வேகம் கிழக்கு ஆசியாவிலிருந்து நகர்ந்து, தெற்கு ஆசியாவை நோக்கி வரும் இப்பருவத்தை பாரதீய ஜனதா சரிவரப் பயன்படுத்துமென எதிர்பார்க்கலாம். ஆனால் வெளிநாட்டு முதலீடும் உள்நாட்டின் தீவிர மதவாத மோதலும் ஒன்றுக்கொன்று எதிரானவை. உள்நாட்டுக் கலவரங்கள் வெளிநாட்டு முதலீடுகளைப் பாதிக்கவல்லவை. பாரதீய ஜனதாவின் ஆட்சி வருகையால் இவற்றைத் தவிர்த்து முதலீடுகளைக் கவர்ந்து கொள்வதே அவர்கள் முன்னுள்ள சவாலாக இருக்கிறது.

இறுதியாக ஒன்றேயொன்றுதான் வல்லரசுகளுக்கு கசப்பானதாக இருக்கிறது. அதுவே இந்தியாவை அணுசக்தி வல்லரசாக்க



முயலும் இவர்களுடைய கொள்கை. இதன் தாக்கங்களை அடுத்தடுத்த மாதங்களில் அவதானிக்க முடியும். மேலும் தமிழீழ மக்கள் அனுபவித்து வரும் துயர் தொடர்பாக பாரதீய ஜனதா சில ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தது. அது குறித்து ஏதாவது நகர்வுகள் உள்ளனவா? தெரியவில்லை. தமிழீழ விடுதலையில் ஈடுபாடுகொண்ட ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அவர்கள் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்றுள்ளார். இந்தியாவின் ஆட்சியதிகாரம் புதியவர்களிடம் கைமாறியுள்ளது. இந்திய மக்களின் எதிர்பார்ப்பு, உலகநாடுகளின் எதிர்பார்ப்பு, தமிழீழ மக்களின் எதிர்பார்ப்பென மூன்று பிரதான எதிர்பார்ப்புக்களுக்கும் இந்த மாற்றம் என்ன பதில் கூறப்போகிறது. அதே அலுத்துப்போன பதில்கள்தானா? அல்லது ஆரோக்கியமான வழியொன்று தெரியுமா? உலகம் பார்த்திருக்கிறது.

**

## உலகின் மிகப் பெரிய பார வண்டி



அரபிக் எமிரேட்டில் உள்ள பாலைவனத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இதுவே உலகின் மிகப்பெரிய இராட்சதப் பாரவண்டியாகும். இதன் சொந்தக் காரர் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஷேக் ஹ மட் நஹ்யான். சக்தி வாய்ந்த இயந்திரத்தைக் கொண்ட இதன் சில்லு 3,5 மீட்டர் விட்டமுடையது ஒரு மோட்டார் வண்டி இதன் கீழ்ப்புறமாகச் செல்ல முடியும். படுக்கையறை, குசினி, விறாந்தை போன்ற வசதிகளும் இதில் உண்டு.

## இலங்கையில் முதல் புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.....



இலங்கையில் முதலாவது புகையிரதப் பயணம் 27.12.1864—ல் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலேயே நடைபெற்றது. இப்பயணம் முதன்முதல் கொழும்பிற்கும் அம்பேபுச என்னும் இடத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# INTERNATIONAL REFUGEES ORGANISATION LTD

1083 Garratt Lane, London SW17 0LN

*Tel: 0181 682 4494. Fax: 0181 682 9922, Emergency:041191 2244*

*V. Culendran (DIRECTOR)*

## Do You Have a problem?





* Immigration
* Immigration Appeals
* Marriage Application
* Deportation
* Student Visa
* Exceptional Leave to Remain
* Asylum Problem
* Indefinite Leave
* Sponsorship
* Settlement
* Family Reunion
* Entry Clearance Appeals
* Air Port Interviews
* Home Office Interviews
* Work Office Interviews
* Work Permit Etc.....




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுப்பிரீம் கோட் சுறுக்கர் அம்மான்

## கொழும்பிலிருந்து குமுறுகிறார்

என்ரை நாகா ஈசுவரி... இதென்ன இடிவிழுந்த வேலையாய் கிடக்கு.... என்ன பிள்ளையள் சுறுக்கர் அம்மான் வணக்கமும் சொல்லாமல் தொடங்கிட்டார் என்று நினைப்பியள். இங்க இப்ப கொழும்பில வணக்கம் சொல்ல முதல்ல... தமிழனெண்டவுடன் வாகனத்தில யல்லோ ஏறச்சொல்லுறாங்கள். எட குண்டு வெடிச்சவுடன நாச மறுவார் ஒண்டுமே அறியாத பெண் புரசுகள் எல்லாத்தையும் இரவோடு இரவாக பொலிசில கொண்டு போய் போடுறாங்கள். எனக்கெண்டால் ஒண்டும் விலங்கேல்ல..... இவ சந்திரிகாவின்ரை ஆட்டம் உச்சக்கட்டத்தைத் தாண்டிற்று. விளைச்சல் காலமெண்டால் அறுவடை காலம் வருகிற மாதிரி இவவுக்கு வில்லங்கம் வரக்கூடும் எண்டு பயப்பிடுகினம். அதோட பிள்ளையள்.. சந்திரிகா அம்மையாருக்கு இப்ப காலம் கூடாதெண்டு பலதரப்பும் கதைக்குதுகள். அவவும் அதெல்லாம் பொய்... தனக்கு இப்ப நல்ல காலம் நடக்குதெண்டு வாய் கூசாமல் சொல்லிப் போட்டா. அனேகமாக சனங்கள் இவவுக்கு பத்தில வியாழனாத்தான் இருக்குமெண்டு கதைக்கினம்.

இந்த நிலையில்.. இந்தியாவில ஆட்சி மாற்றம் வந்த உடன வாலெல்லாம் சுருட்டுகினம். களவெடுக்கப் போனவன் ஆளைக் கண்டவுடன முழிக்கிறமாதிரி எல்லாரும் முழிக்கினம். பிள்ளையள் ஆட்சியில அமர்ந்த பாரதீய ஜனதாக் கட்சிக்காரர் முதல்லயே சொல்லிப் போட்டினம் ஈழத் தமிழர் பிரச்சினைல தங்களுக்கு அக்கறை இருக்குதெண்டு. சொன்னாப்போல தமிழ் நாட்டில முக்கியமா வை.கோ, ராமதாஸ் நல்ல வெற்றியடைஞ்சதும் சரியான கவலையாய் கொழும்பு இருக்குது. இவையெல்லாம் எங்கடை விசயம் அறிஞ்சவை தானே.... அதோட பிள்ளையள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியில இப்ப இருக்கிறவர் எங்கடை தம்பியின்ர ஆளாம் எண்டு கதைக்கினம். ஆனால் ஒண்டு மட்டும் உண்மை. அந்த மனுசன் ஜோர்ச் பெர்ணான்டோஸ் ஈழத்தமிழற்றை பிரச்சனைல ஒரு நல்ல நேர்மையான அணுகுமுறையைப் பிடிக்கிறார். எதுக்கும் பிள்ளையள் ஆட்சி ஈடாடாமல் இருக்கவேணும். எல்லாம் அந்த நல்லூரரான்தான் காக்கவேணும்.




இன்னுமொரு முசுப்பாத்தி பிள்ளையள்.... இந்தியாவில வாஜ்பாய் பிரதமராகப் பதவியேற்றகையோட.... எங்கடை மொழி தெரியாத் தமிழன்... அதுதான் வெளியுறவு வேதாளம் எனக்கு வர்ற எரிச்சலுக்கு வேற என்னத்த சொல்ல... அந்தப் படுபாவி உடன இந்தியாவுக்கு போயிற்றார். போய் இலங்கை இந்திய நல்லுறவுகள் பற்றி மனுசன் பேசியிருக்கு. அதோடை சந்திரிகா என்னண்டால் தம்பி கிளின்டனை தடவிறதா... வாஜ்பாயை வருடுறதா எண்டு... நித்திரையிலும் நினைக்கிறமாதிரி கதைக்கினம் பிள்ளையள். எதுக்கும் இந்தியாவில இப்ப காங்கிரஸ் பதவியில இல்லையெண்டதை மறந்திட்டா பாவி.

இத்தனைக்கும் மத்தியில பிள்ளையள் எனக்கொரு மனவருத்தம்... என்னண்டால் போன கடிதத்திலும் நான் சாதுவாய் இதைத்தான் எழுதினனான். எல்லாரும் இராணுவ அணுகுமுறையை கண்டிக்கினம். பேரழிவு... உயிரிழப்பு எண்டு விமர்சிக்கினம். இவைக்கு வடிவாத் தெரியும் பிள்ளையள்... தமிழனுக்கு இவங்களட்ட இருந்து எந்த உரிமையும் கிடைக்காது. இது வெறும் பம்மாத்து எண்டும் தெரியும். தெரிஞ்சும் எங்கடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு தனியரசுதான் எண்ட தொனியில் இந்தப் பத்திரிகை விமர்சகர்கள் ஒருக்காய் இடிச்சுக் கூறலாம் தானே. பாருங்கோ பிள்ளையள் கிருஷாந்தி எண்ட எங்கடை பிள்ளையின்ர சாவுக்கு... நீதிகாண முடியாத சிங்கள அரசு. எப்படி ஒரு இனத்தின்ரை சுதந்திரத்தைப் பற்றி யோசிக்கும் எனக்கெண்டால் ஒண்டுமே விளங்கேல்லை....

மற்றது பிள்ளையள்... அமெரிக்க கடற்படை வீரர்கள் இலங்கைக் கடற்படைக்கு விஷேட பயிற்சி கொடுத்து முடிஞ்சுதெண்டு கதை அடிபடுகுது. நான் நினைக்கிறேன் பெடியள் தாட்ட கப்பலைக் கண்டுபிடிக்க நல்ல சுழியோட்டம் பழக்கியிருப்பாங்கள்.

வேறென்ன தம்பியவை... யாழ்ப்பாணத்திலதான் இந்த நாசமறுவார்... ஒரு வாய் பேச முடியாத பிள்ளையை......தெரியும்தானே... இவங்கள் என்ன செய்வாங்கள் எண்டு. ஆமிக்காரர் புதுசு புதுசா காரணம் காட்டுறாங்களாம். எல்லை மீறிப் போச்சு பிள்ளையள்.

இஞ்சை எனக்குத் தெரிஞ்ச பெடியன் சொன்ன பகிடிக்கதை தான் ஞாபகம் வருகிறது. தேர்தல் விழாவுக்குப் போன விளக்குமாறுகள் ராணுவத்திற்கு சொன்னவையாம் நீங்கள் எங்கடை சனத்தோட நல்லுறவைப் பேணவேண்டும் எண்டு. அவங்கள் அதை பிழையாய் விளங்கி வல்லுறவு பேணுறாங்களாம். நான் திரும்ப... திரும்ப... சொல்லுறன் பிள்ளையள் எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேல்லை. இன்னுமொரு... செய்தி புலிகள் தடைப்பற்றி அரசு அறிவிப்பு செய்திருக்கு அதில எக்கச்சக்கமான கண்டிப்புகள் சொல்லி இருக்கு யாரும் எவரும் புலிகள் பற்றி கதைக்கவோ எழுதவோ கூடாது. அப்படி நடந்தால் தண்டனைக்குரிய குற்றம் எண்டும் சொல்லி இருக்கினம். ஆதரவு குடுக்கக்கூடாது, தங்க இடம் குடுக்கக் கூடாது. சகலதும் புலிகளுக்கு தடை. ஆனால் பிள்ளையள் கொழும்புக்கு குண்டு லொறி வரமட்டும் தடையில்லைபோலக் கிடக்கு. அப்படி அறிவிப்பில இல்லை. என்ன ..... இந்த சுறுக்கர் அம்மானும் பகிடிவிடுகிறார் என்று நினைக்கிறியள் போலக்கிடக்கு. அந்தக்காலத்தில நான் சரியான பகிடிக்காரன் பிள்ளையள்.

மருதானைக் குண்டுவெடிப் போட... குலை நடுங்கிப்போன ரத்வத்தையார்... கண்டிப்பாய் சொல்லிப் போட்டாராம்... தமிழ்ப் புத்தாண்டுக்குள்ள பாதை திறந்து போடுவினமாம். பாவம் மனுசன் என்னத்தை வேற சொல்லமுடியும். ஆனால் எந்த வருட தமிழப் புத்தாண்டு எண்டு சொல்லவே இல்லை.

கொழும்பில பிள்ளையள் இந்த ஆண்டை ஏவுகணை ஆண்டு எண்டு கதைக்கினம். எனக்கும் ஒண்டுமே விளங்கேல்லை. பிறகு தான் கேள்விப்பட்டன். வருஷம் பிறந்ததில இருந்து தொடர்ந்து எங்கட தம்பி ஏவுகணைத்தாக்குதல்ல முழுமூச்சாய் நிற்கிறாராம். நான் நினைக்கிறன் ஆட்டிலறி அடியைச் சொல்லுகினம் போல கிடக்கு. எதுக்கும் பொதுசனமே முடிவுகட்டிற்றுது இந்த ஆண்டு ஏவுகணை ஆண்டு எண்டு.


வேறென்ன பிள்ளையள்... பொறுமைக்கும் ஒரு எல்லை வேணும். அது மீறினால் என்ன நடக்குமோ..... அதுதான் நடக்குது..... இன்னும் நடக்கும்.

அடுத்தமுறை சந்திப்பம் பிள்ளையள்.

**

## பதின்மூன்று வயதுச் சிறுவர்களின் அட்டகாசம்

அமெரிக்காவில் ஜனாதிபதி கிளின்டனின் மாநிலம் ஆர்கன்ஸஸ் (Arkansas) ல் உள்ள ஜோன்ஸ்பொறோ (Johnesboro) என்றும் இடத்தில் மார்ச் கடைசியில் கல்லூரி செல்லும் இரு மாணவர்கள் ஆந்திரோ கோல்டன் (Andrew Golden) வயது 11. மிஷெல் ஜோன்சன் (Mitchell Johnson) வயது 13 ஆகிய இருவரும் நவீன துப்பாக்கிகளுடன் அவர்கள் படிக்கும் பாடசாலைக்குள் சென்று நான்கு சிறுவர்களையும், கல்லூரியில் கடமை புரிந்துகொண்டிருந்த கர்ப்பிணி ஆசிரியையும் சுட்டுக் கொன்றுள்ளார்கள். அந்த இடத்திலேயே இரண்டு சிறுவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடமிருந்து 10 வித்தியாசமான நவீனரக துப்பாக்கிகளும் 20 வகையான 2000 ரவைகள் கொண்ட பெட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. எதற்காக இந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள் என்று இதுவரை அறியப் படவில்லை.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்தமிழரைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

**தமிழீழத்திலிருந்து மு. திருநாவுக்கரசு.**

பீனிக்ஸ் (Phoenix) ஓர் அராபிய ஐதீகப் பறவை. இது பண்டைய எகிப்தில் வழிபாட்டுக்குரியதாய் இருந்தது. சுமாராக ஐந்தாறு வருடங்கள் இப்பறவை உயிர் வாழ்ந்து தான் முதுமையடைந்துவிட்டதாக உணருமிடத்து தீயிற் குதித்து எரியும். எரிந்த தன் சாம்பலில் இருந்து இளமைத் துடிப்புடன் மீண்டும் புத்துயிர் பெறும். இந்த ஐதீகப் பறவை தோல்விகளால் துவண்டுவிடாது மீண்டெழ முடியும் என்ற நம்பிக்கையை மனிதர்கள் நீண்டகாலமாகவே கொண்டிருப்பதற்கு அடையாளமாகும்.

எதிரி ஈழத்தமிழரின் வாழ்வையும் வளத்தையும் சாம்பல்மேடாக்க முயற்சிக்கலாம். ஆனால் அந்தச் சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் புது மலராய் பூத்துக் குலுங்கும் துணிவும் தைரியமும் முனைப்பும் ஈழத்தமிழரிடம் உண்டு.

சுவாத்திய நிலை காரணமாக தொடர்ச்சியான தனது விவசாயத்தில் அழிவும், தோல்வியும் ஏற்பட்ட போதிலும் சளையாது மீண்டும் மிடுக்குடன் ஈழத்தவன் தனது உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்குவதை “மீண்டும் தொடங்கும் மிடுக்கு” என மகாகவி தனது கவிதை வரி ஒன்றில் மிக அழகாகக் கூறினார்.

பேராசிரியர் இஹ்காறி, செக்சினே ஆகிய ஜப்பானிய ஆராய்ச்சியாளர் இருவர் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சமூகவியல் ஆய்வில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுடன் பலதடவைகள் நான் உரையாடுகையில் தமிழர் பற்றிய தமது சில மனப்பதிவுகளை அவ்வப்போது கூறினர்.

பேராசிரியர் இஹ்காறி, தனது மனப்பதிவைக் கூறுகையில் தோட்டப் பயிற்சி செய்கையில் விவசாயிகள் கடைப்படிக்கும் “நிலச்சிக்கனமும்” தன்னை வெகுவாகக் கவர்ந்துள்ளதாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் “சிக்கனம்” உள்ளவர்கள் என்றும் “தன்னேசிப்புள்ளவர்கள்” என்றும் “போட்டி மனப்பாங்கு” கொண்டவர்கள் என்றும் விபரித்தார்.

யாழ்ப்பாணத்தில் சில ஆண்டுகள் உத்தியோகத்தராய் கடமையாற்றிய ஐரிஸ்காரரான திரு.ரெறி என்பவருடன் பொழுதுபோக்காய் அவ்வப்போது பல தடவைகள் நான் கதைப்பதுண்டு. அவர் தமிழர் பற்றிக் கூறிய மனப்பதிவுகள் சிலவற்றை இங்கு நோக்கலாம். தமிழர் “கடின உழைப்பாளிகள்” என்று பொதுவாகக் கூறப்படுவதைத்தான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்றும் தமிழர் பொதுவாகச் “சுறுசுறுப்பற்றவர்கள்” என்று கூறினார். அனாயசமான ஒரு சினத்துடன் இதனை அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் தமிழர் அதிகம் “கதைகாரர்” என்றும் குறிப்பாக காரியாலயங்களில் இவர்கள் வேலை செய்யும் நேரத்தையும் விட ஒருவருடன் ஒருவராகவோ, அன்றிக் கூட்டம்கூட்டமாகவோ கதைக்கும் நேரம் தான் அதிகம் என்றும் கூறியதுடன் “அரட்டை அடிப்பவர்கள்” என்று மேலும் கடினமான வார்த்தையிற் கூறினார்.

தனக்கெனச் செலவழிக்காமலும், தான் சாப்பிடாமலும் தனது குடும்பத்தவர்களுக்கு தின் பண்டங்களை வாங்கிச் செல்லும் இயல்புடையவர்கள் என்று அவர் மேலும் கூறினார். உண்மையில் தன்னைவிடவும் தன் குடும்பத்தை முன்னிறுத்தும் நல் இயல்பு பொதுவாகத் தமிழரிடம் உண்டு என்பதிற் சந்தேகமில்லை. திரு. ரெறி உத்தியோகத்தர்களுடனும், அவர்களைச் சார்ந்தவர்களுடனுமே அதிகம் பழகினார். அவர் உத்தியோகத்தவர்களுடனான தனது அனுபவத்தை தமிழர் அனைவருக்குமான ஒரு பொதுக் கருத்தாகக்

## தரித்திரம் இல்லாத சரித்திரம்

வெள்ளைச்சாமி ஒருநாள் சரித்திரம் படித்துக்கொண்டிருந்தார். அதிலே ‘ராஜ ராஜ சோழன், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்’ என்றெல்லாம் வந்தது.

“இவ்வளவு நாடுகளையும் அவன் எப்படி ஜெயித்தான்?” என்று தன் நண்பரிடம் கேட்டார்.

“அந்த நாளில் ஜனநாயகம் இல்லை!” என்றான் நண்பன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறியுள்ளார் என்பது இங்கு கவனிக்கப்படக்கூடிய விடயமாகும். தமிழர் பற்றி தன்னிடம் ஐரோப்பியர் ஒருவர் கூறிய கருத்தாக எனது சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அதாவது "தான் என்ன செய்கிறேன் என்பதைவிடவும் பிறர் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அதிகம் அவதானிப்பவர்கள்" என்றார்.

தமிழரைப் பற்றி பிறத்தியார் கூறிய கருத்துக்கள் சரியானவையா? அல்லது பிழையானவையா? என்பது ஒருபுறமிருக்க இவ்வாறான கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். அவை எங்களை நாங்களே புடமிடவும், செழிமைப்படுத்தவும் உதவும்.

ஈழத்தமிழர் பற்றி அந்நியர் பலவாறு கூறியிருப்பினும் அவர்களிடம் 20–ம் நூற்றாண்டு முழுவதும் ஒரு சிறப்பியல்பு இருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. பொதுவில் இந்த நூற்றாண்டு முழுவதும் அவர்கள் விடுதலையின் பக்கம், அதாவது போராட்டத்தின் பக்கம் நின்று வருகிறார்கள். பிரித்தானியருக்கு எதிரான இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாய் இருந்துள்ளதையும், இலங்கையில் வெள்ளையனுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளாயும் இருந்துள்ளனர். சிங்கள ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்திலும் மக்கள் எப்போதும் நின்று வந்துள்ளார்கள். எதிரிக்கு முன்னாள் வெளிப்படையான அர்த்தத்தில் அவர்கள் அவ்வப்போது தம்மை உருமறைப்புச் செய்து கொண்டுள்ளார்களே ஆயினும் அவர்கள் பொதுவாகப் போராட்டத்தின் பக்கம் தான். அதாவது எதிரியைப் பார்த்து அவனது மொழியில் வணக்கம் சொல்வார்கள், கையும் குலுக்குவார்கள், ஆனால் நடைமுறையில் போராட்டத்தின் பக்கம் செயற்படுபவர்களாய் உள்ளனர். அளவால் சிறிய இனம் என்ற வகையில் இப்படிப்பட்ட தந்திரங்களுக்கு இலகுவில் ஆளாவதுண்டு, ஆனாலும் குறிக்கோளில் போராட்டப் பக்கம் சாய்ந்திருப்பவர்கள்.

கொழும்பிலிருந்து வந்து தமிழ்ப் பகுதிகளில் சிங்கள இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் பொதுக் கூட்டங்களை நடத்துவதுண்டு, அப்போது தமிழர் பல ஆயிரக்கணக்கில் கூட்டம் கூடுவார்கள். ஆனால் தேர்தலின் போது தமிரசுக் கட்சிக்கு பெருமளவில் வாக்களிப்பார்கள். சில நூறு வாக்குகளே சிங்கள இடதுசாரிக் கட்சியினருக்கு கிடைக்கும். இதுபற்றி கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவிடம் கலாநிதி என்.எம் பெரேரா கூறியதாகச் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பின்வருமாறு கூறினார். அதாவது தமிழர் எமக்கு கைதட்டுவார்கள், மாலை போடுவார்கள், விருந்தும் வைப்பார்கள் ஆனால் தேர்தலில் சமஷ்டிக் கட்சிக்கு (தமிழரசுக்கட்சி) வாக்களித்து விடுவார்கள் என்று குறிப்பிட்டார். தமிழர் சிறிய இனம் என்ற வகையிலும் மற்றும் சூழல் பலவீனத்தின் மத்தியிலும் தந்திரத்தை ஆடையாக அணிபவர்களாயும், சந்தர்ப்பம் சூழலுக்கேற்ப சாமர்த்தியமாக நடந்து கொள்ளும் திறனிற் கைதேர்ந்தவர்களாயும் உள்ளனர். பொதுவில் இவர்கள் விழிப்புடையவர்களாயும், அதிகம் ஏமாற்றப்படமுடியாதவர்களாயும் உள்ளனர். இவர்கள் விரைவில் விளக்கத்திற்கு வந்துவிடுவார்கள்.

தென்னாசியாவில் உள்ள மக்கள் கூட்டங்களில் ஈழத்தமிழர் அதிகம் உணர்ச்சி வசப்படாதவர்கள்; இலகுவில் இலட்சியவசப்படக்கூடியவர்கள், தமிழீழ தேசிய நோக்கு நிலையிலிருந்து இவர்களின் இயல்புகள் அதிகம் புரிந்து கொள்ளப்பட்டு குறைகள் களையப்படவும், நல்லவை செழிப்பூட்டப்படவும் வேண்டும்.

## நேருவுக்கு எதிராக கலைஞர் எழுதிய வசனம்



நேரு தமிழர்களின் உரிமைப் போராட்டம் முட்டாள்தனமானது என்று இகழ்ந்தபோது, அதை எதிர்த்து கருணாநிதி செங்குட்டுவன் நாடகத்தில் எழுதிய வசனம். "என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள் தருக்கர்கள். சாகாத குறள் தந்த கோமானே! வள்ளுவனே உன்னை இகழ்ந்தார்கள். அத்தாணி மண்டபத்தில் சத்தான கருத்துரைக்கும் சாத்தனாரே உன்னைஇகழ்ந்தார்கள். ஈடற்றவனே இளங்கோ ஆசைத்தம்பி உன்னை இகழ்ந்தார்கள். என்று எழுதினார்.



சிலப்பதிகாரத் திறனாய்வு என்ற நூலிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேடலும்



ஆ. பாப்பா

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களால் வருடாந்தம் நடாத்தப்படும் கலாச்சார விழாக்கள் பற்றின ஒரு அலசலே இக்கட்டுரையாகும். கலாச்சார விழாக்கள் என்னும் போது இங்கு நான் குறிப்பிடுவது நமது தேசத்தின் விடிவோடு தொடர்புபட்ட விழாக்களையல்ல. இதுதவிர்ந்த விழாக்களை கொண்டாடுவதற்கான காரணங்கள் அல்லது நோக்கங்களாக.

– தமிழர்களின் ஒற்றுமையைப் பேணுதல்

– எமது கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் நாடு கடந்தும் பாதுகாக்கப்படுதல், பரவலாக்கப் படுதல்.

– தமிழ் சிறார்களின் தமிழ்மொழிப்பற்று, தாய் நாட்டுச் சிந்தனை, கலாச்சார விளக்கங்கள் போன் றவற்றை வளர்த்தெடுத்தல்.

இவை போன்ற முக்கிய அம்சங்கள் பெரும்பா லான ஒன்றியங்களால் சங்கங்களால் முன் வைக்கப் படுகின்றன. நல்ல நோக்கங்கள் தான். ஆனால் இவை எவ்வளவு தூரம் செயல்ப்படுத்தப்படுகின்றன எனப் பார்த்தால்...... ம்..... மீண்டும் பெருமூச்சு தான் மிஞ்சுகிறது.

'தமிழர்களின் ஒற்றுமை பேணப்படுவதற்காக' என்ற அம்சத்தை எடுத்தால் தாய்மண்ணில் விழாக் கள் மூலமாக கிராமங்களிலும் சரி நகரங்களிலும் சரி எமது ஒற்றுமையை எத்தனையோ தடவை பறை சாற்றியவர்கள் நாம். பிறந்த மண்ணை விட்டு, முற்றும் முழுதான ஒரு அந்நியச் சூழலில் நடைப் பிணங்களாய் நடமாடிக் கொண்டிருக்கிறோம். எம்மை இடைநிறுத்தி எம் இனத்தவருடன் ஒன்று கூடி மகிழ்ந்து நாம் உணர்வுள்ள மனிதர்களாய் செயற்படக்கூடிய களங்களை புலம்பெயர்நாடுகளில் தமிழரால் நடாத்தப்படும் கலாச்சார விழாக்கள் அமைத்துத் தந்திருக்க வேண்டும். ஆனால்.... ஆனால்... இங்கு என்ன நடக்கின்றது? விழாக்களை நடாத்தும் சங்கங்கள் அல்லது ஒன்றியங்களின் நிர்வாகப் பொறுப்புக்களைப் பகிர்வதில் பல பிரச்சினைகள். ஊர் பிரிவுகள், சாதிப்பிரிவுகள், மதப்பிரிவுகள் போன்ற எம் சமூகத்தைச் சீரழித்துக் கொண்டிருக்கும் பிரிவினை வாதங்களால் வெளிக் காட்டப்படுகின்றன. இதனால் நிர்வாகக் குழுவினர் தமிழர்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவதை விடுத்து குழுவாதங்களுக்கு தீனி போடுபவர்க ளாகவே இருப்பது வேதனைக்குரியதே.

நாம் தலைமுறை தலைமுறையாக பேணிக்காத்து வந்த எமதுபண்பாட்டு விழுமியங்களை நாடுகடந்து வந்தாலும் அழியவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு புலம்பெயர் தமிழனுக்கும் உண்டு. இக் கடமையை நிறை வேற்றவும் எமது பண்பாட்டு அம் சங்களைப் பரவ லாக்கவும் நல்ல சந்தர்ப்பத்தை நாம் நடாத்தும் விழாக்கள் தருகின்றன. தமிழர் வாழ்வை வளம்படுத்திய, வளம்படுத்தும் நாம் பெரு மைப்படக்கூடிய எத்தனையோ கலை வடிவங்கள் நம்மிடம் இருக்கின்றன. அவற்றில் திறமை பெற்ற கலைஞர்கள் பலர் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இக் கலைவடிவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கலைஞர்களை ஊக்குவிப்பதாலுமே நாம் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கலாம். ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில் என்ன நடக்கி

## விவாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



றது? எமது பாரம்பரிய கலை வடிவங்களை இந்தியத் தமிழ் சினிமா தின்று விழுங்கிக் கொண்டிருக்கிறது. “சினிமா” என்ற அருமையான வெகுஜனத் தொடர்பு சாதனத்தின் நல்ல பல அம்சங்களை விடுத்து அதனைக் கொச்சைப்படுத்திக்கொண்டிருக்கும் இந்தியத் தமிழ்ச் சினமாவின் துணையுடன் மேடை நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படும் மிகத்துயரமான நிலையே காணப்படுகிறது. நிகழ்ச்சிகளின் தரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எப்படியாவது விழா நிகழ்ச்சிகள் முடிவடைந்தால் போதும் என விழாக்குழுக்கள் செயற்படுகின்றன. ஈழத்தின் இந்த நெருக்கடியான போர்க்கால நிலைமைகளிலும்

# தெளிவும்

நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் எமது கலை வடிவங்களுக்கு முக்கயத்துவம் கொடுப்பனவாயும் பார்வையாளரை சிந்திக்க வைப்பனவாயும் அமைவதைக் காணக்கூடியதாயுள்ளது. புலம் பெயர் தமிழ்களுக்கென உள்ள பிரச்சினைகளையும் தாய் நாட்டுப் பிரச்சினைகளையும் பிரதிபலிக்கக்கூடிய தாய் அதேசமயம் எமது கலைவடிவங்கள் ஊடாக பார்வையாளரை சிந்திக்க வைக்கக்கூடியதாய் நிகழ்ச்சிகளை இவ்வளவு வசதிபடைத்த நாட்டில் வாழும் எம்மால் ஏன் தயாரிக்க முடியாது? இதைப்பற்றி எப்போது விழாக்களை நடாத்துவோர் சிந்திக்கின்றரோ அப்போதுதான் அவர்களது இரண்டாவது நோக்கம் நிறைவேறும்.

அடுத்து சிறு வயதிலேயே புலம்பெயர்ந்து அல்லது இங்கே பிறந்து வளர்ந்துவரும் தமிழ் சிறார்கள் நாம் அனுபவித்த, எம்மைப் பக்குவப்படுத்தி, நாம் யார் என்பதை இனங்காட்டிய பலவற்றை இழந்துள்ளனர். இந்த இழப்பை நிவர்த்தி செய்து எமது எதிர்கால சந்ததியினரை சமூகப் பொறுப்புள்ளவர்களாக வளர்க்கும் பெரியதோர் கடமை எமக்குண்டு. இக்கடமையை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கவேண்டியவர்கள் பெற்றோர்களே. பெற்றோரைவிட விழாக்களில் நடாத்தப்படும் மேடை நிகழ்ச்சிகளும் இக் கடமையை நிறைவேற்ற உதவும். “இரு மொழிபேசும் இரு கலாச்சாரப் பிள்ளைகள்” என்னும் பட்டத்தை சுமந்துகொண்டு திரியும் எமது பிள்ளைகள் தாம் யார், எமது

# அரங்கு

பாரம்பரியம் என்ன என்பதை உணர்ந்து தெளிய வேண்டும். அந்தத் தெளிவைக் கொடுக்கக்கூடிய விடயங்களைக் கேட்பதாலும் பார்ப்பதாலும் தமிழச்சிறார்கள் தமது அடையாள அட்டையைப் பெறுகின்றனர். எனவேதான் விழாக்கள் நடத்துவதில் முக்கியமான நோக்கங்களாக எமது சிறார்களின் தாய்நாட்டுச் சிந்தனையை வளர்த்தல், தாய் மொழிப்பற்று, கலைபண்பாட்டு விளக்கங்கள் கொடுத்தல் என்பன அமைகின்றன.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் நடாத்தப்படும் தமிழ் கலாச்சார விழாக்கள் இந்த நோக்கத்தில் எவ்வளவு தூரம் கவனம் செலுத்துகின்றன என்பது கேள்விக்குறியே. “தமிழச்சினிமா கலாச்சார விழாக்கள்” என்று பெயரை வைக்கக்கூடியளவுக்கு சில விழாக்கள் நடைபெறுகின்றன. இங்கு இன்று பரதநாட்டியம் மலிந்துபோய் பார்வையாளரை எழுப்பும் நிகழ்ச்சியாகவும் தமிழ்ச்சினிமா தழுவிய நடனங்கள் நிகழ்ச்சிகள் பார்வையாளரை கிளுகிளுப்பு ஊட்டக்கூடியவையாகவும் மாறிவரும் போக்கைக் காணக்கூடியதாய் உள்ளது. இதற்கு காரணகர்த்தாக்கள் ஒரு மேடை நிகழ்ச்சியில் பத்து பதினைந்து பரதநாட்டிய நிகழ்ச்சிகளைத் தந்து பார்வையாளரைச் சலிப்படையச் செய்யும் பரநாட்டிய ஆசிரியர்களா அல்லது எத்தனை ஆயிரம் மைல்களுக்கப்பால் ரசிகர்களுக்கு கிளுகிளுப்பை உண்டாக்கிய நடிகநடிகையரை மிகச் சிறிய இடைவெளியில் தன் பிள்ளைகளின் உருவத்திலேயே கண்டு மனம் பூரிப்படையும் பெற்றோர்களா, அல்லது இவை ஒன்றையும் கருத்திற்கொள்ளாது செயற்படும் விழாக்குழுக்களா?

எது எப்படி இருப்பினும் இந்தப் போக்கு மாறவேண்டும். நான் ஏற்கனவே குறிப்பிட்ட மூன்று நல்ல நோக்கங்களையும் மனதில் கொண்டு கழகங்கள், சங்கங்கள் போன்றவை மேடை நிகழ்ச்சிகளை தரமுள்ளதாக நடாத்தவேண்டும். பார்வையாளரின் ரசிப்புத் தன்மையை கீழத்தரமானதாக்காமல் தரம் கூடியதாக்க வேண்டும். இவற்றை நிறைவேற்றுவதில் தமக்குள் இருக்கும் முரண்பாடுகளை விடுத்து ஒற்றுமையாகச் செயற்படவேண்டும். இதுவே எமது சமூகத்திற்கு ஆரோக்கியமானதாக அமையும். எனவே கலைநிகழ்ச்சிகள் இனி வரும் காலங்களில் தரமானவையாக அமையும் என்று நம்புகின்றேன்.

நன்றாகச்
சிந்தனை செய்தல் புத்திசாலித்தனம்.
நன்றாகத் திட்டமிட்டல் மேலும்
அறிவுடையதாக்கும். நன்றாகச் செய்து முடிப்பதே
எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

பாரசீகப் பழமொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாதபலன்

## மார்ச் 1998



சாத்திரியார்

பௌத்த மதத்தைப் போற்றிப் பூசித்து கனம்பண்ணி தலையில் தூக்கி ஆடும் பௌத்த சிங்களப் பேரினவாத அரசாங்கம் இந்த மாதத்தை ஒரு மத அவமரியாதையுடன் ஆரம்பித்து வைத்தது. பரந்தன், முல்லைத்தீவு வீதியில் முரசுமோட்டைப் பகுதியில் அமைந்திருந்த சதாசகாயமாதா தேவாலாயம் சிறீலங்காப் படையின் குண்டுவீச்சுக்கு இலக்கானதில் ஒரு பகுதி கடுமையாகச் சேதமடைந்து மிகுதி, எப்பொழுதும் இடிந்து விழக் கூடும் என்ற அச்சத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது.

இந்த மாதத்தின் இறுதியும் மனங்களை கவலை கௌவ்வ இறுகிய உணர்வைச் சுமந்தபடி கடந்து மறைகின்றது. 4–ம் திகதி மக்களின் மதத்தில் கைவைத்த சிங்களப்படை, மாத இறுதியில் 26–ம் திகதி மக்கள் மீதே மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தி தனது சுய இயல்பை மறக்காமல் வெளிப்படுத்தியுள்ளது. புதுக்குடியிருப்பு வட்டக்கச்சிப் பகுதியில் சிறீலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் ஐந்து பொது மக்கள் துடிதுடித்துப் பலியாகினர். ஐந்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மக்கள் சொத்துக்கள் நாசப்படுத்தப்பட்டன. அன்றைய தினம் கடலிலும் சிறீலங்காப்படை தாக்குதல் நடத்தி மீனவர்களின் உயிர்களைக் காவுபோட்டது.

இந்த அநியாயங்களுக்கு சிங்களப்பாதுகாப்பு அமைச்சகம் வெளிவிடும் செய்திகளுக்கும்தான் எத்தனை முரண்பாடு. பொதுமக்களின் உயிர்களைக் காவுகொள்ளும் இந்தக் கொடுஞ் செயலிற்கு, சிங்கள அரசு கொடுக்கும் விளக்கம் அதனிலும் கொடியது.

இந்த மாதத்திற்கு இன்னுமொரு அழுத்தமான சிறப்பிருக்கின்றது. ஒரு தேசிய எழுச்சியின் வடிவமாக, தாய்க்குலத்தின் தற்கொடை உணர்வின் அடையாளமாக அன்னை பூபதியின் போராட்ட ஆரம்பம் இந்தமாதத்தில் தான். தமிழீழத்தில் இருந்து எழுந்த இந்த உன்னத எழுச்சியின் வடிவம், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான மக்களின் எதிர்ப்பியக்கத்தின் அடையாளமானது. இந்திய அமைதிப்படையிடம் அமைதியை வலியுறுத்தி ஒரு அமைதியின் வடிவம் சிறுகச் சிறுக தன்னை ஒப்படைக்க ஆரம்பித்தது 19–ம் திகதி. இந்தத் திகதியில் இந்தியாவின் பன்னிரண்டாவது மக்களவையின் பிரதமராக பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் வாஜ்பாய் பிரதமராகப் பதவி ஏற்றுக்கொண்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இரண்டும் ஒன்றுக்கொன்று முடிச்சுப்போடுகின்ற விடயங்கள் அல்ல என்றபோதும், இந்தியாவில் புதிய ஆட்சிகுறித்தான எதிர்பார்ப்பு எல்லோர் மட்டத்திலும் குறிப்பாக உலகத் தமிழர்கள் மட்டத்தில் இருப்பதால், இந்த மாதத்துப் பலனில் இந்திய அரசியலும் இடம்பிடித்துக் கொள்ளுகின்றது. சமதாக் கட்சித் தலைவர் ஜோஜ் பெர்ணான்டஸ், டாக்கடர் ராமதாஸ், கோபால்சாமி போன்ற ஈழத்தமிழ்மக்களின் துன்ப துயரங்கண்டு கலங்கும் மனங்கள், இந்த இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிப்பதால் மக்கள் மத்தியில் வழமையைவிட கூடுதல் எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது.

ஜெயசிக்குறுப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே பெரும் மோதல்கள் ஏதும் நடந்திராதபோதும், இந்த மாதத்து முதல் இருவாரத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட ஊடுருவித் தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தியிருக்கின்றன . இழப்புக் குறித்த கலக்கத்தைவிட, இந்த வகை கண்ணுக்குத்தெரியாத ஊரவல்கள், ஊடுருவி மேற்கொள்ளப்படும் கண்ணிவெடித்தாக்குதல்கள், சிறுசிறு தாக்குதல்களை எப்படி எதிர்கொள்வது என்பது மற்றுமொரு பிரச்சினையாகியுள்ளது. எதிர்ப்படையை பெருமளவு போராளிகளுடன் எதிர்கொள்ளும் அதேவேளை, அதுபோன்ற சிறுசிறு தாக்குதல்கல் படையின



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரின் மனநிலையை பெரிதும் பாதித்துவிடும் என்பதே படைத்த லைமையின் கவலை.

கடந்த மாதத்து இறுதிப்பகுதி யில், இன்னும் ஓரிரு தினங்களில் மாங்குளத்தை பிடித்துவிடுவோம் என, சிறீலங்கா அரசாங்கம் மிக இலகுவாகக் கூறியிருந்தபோதும், அது இந்தமாதம் வரையில் சாத்தியமாகவில்லை என்பதுடன், தமது பாதையை மாற்றும் நிலைக்கு அவர்கள் வந்துள்ளார்கள் என்பது புதிய திருப்பம்.

இரு நாட்களில் மாங்குளத்தை கைப்பற்றும் திமிர்த்தனத்தை கடந்த மாதம் பேசிய சரத்முன சிங்கா, மாங்குளம் படையினரைப் பொறுத்தவரை முக்கியமல்ல என வும், புலிகளை இழுத்து அழிப்பதே தமது நோக்கம் என இன்று கூறும் நிலைக்கு நிலைமை மோசமடைந் துள்ளதை படையினர் தரப்பில் ஒத்துக்கொள்ளப்போவதில்லை. விடுதலைப்புலிகளை வலியச்சண் டைக்கிழுத்து அழிப்பதென்ற பிதற் றல்களை, யாரும் ஏற்றுக்கொள் ளப் போவதில்லை. புலிகளின் இடத்திற்கு இவர்களாக வலியச் சென்று அழிவைச் சந்திக்கின்றனர் என்பதே உண்மையாகும். இதற்கு பெரும் படைத்துறை ஆய்வுகள் தேவையில்லை.

இந்த மாதத்தில், பருவமழை ஓய்வுபெற ஜெயசிக்குறுப் படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மழைபோன்ற எறிகணைத் தாக்குதல்களும் விஷேசம் போலும். பல முன்னணி இராணுவக் கட்டளை அதிகாரிகளை அள்ளிச் சென்று, வைத்தியசாலைகளில் அது போட்டுள்ளது. தலைமை அதிகாரிகள் மாற்றம், சிங்களப்படைக்குத் தடமாற்றும் என்பதில் சந்தேகமில்லை. குறிதப்பாமல், தலைமையகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்கள் சிறப்பானவை. இதில் 200–க்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் என்பதும், இருபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பதும் அறிக.

இதைவிட குடாநாட்டில் இங்கும் அங்குமாக பல தாக்குதல்கள்

> **விடுதலைப்புலிகளை வலியச் சண்டைக்கிழுத்து அழிப்பதென்ற பிதற்றல்களை, யாரும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.**

நடந்தாலும் வடமராட்சியில் அம்பன் குடத்தனைப் பகுதியில் 12–ம் திகதி நடந்த நேரடி மோதல் முக்கியம் பெறுகின்றது. குடாநாட்டில் நேரடி மோதல் இடம்பெற்று, சிங்களப்படை இழப்புக்களுடன் பின்வாங்கிக் கொண்டது குடாநாட்டு மீட்புக்கான முதற்படிபோலும். மறுநாள் யாழ் பருத்தித்துறை வீதியில் இராணுவ வாகனம் தாக்கியழிக்கப்பட்டதும், 20–ம் திகதி கொடிகாமத்தில் இராணுவநிலை மீதான தாக்குதலும் பாசையூர் மோதல்களும் குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் கால்கள் அழுத்தம்பெறுவதை காட்டுகின்றது.

இந்த மாதம் வேதனையைக் கூடவே சுமக்கின்றது. மீசாலையில் வாய்பேசமுடியாத காதுகேளாத ஒரு இளம்பெண் சிங்கள இராணுவக் குண்டர்களால் பாலியல் வெறித்தனத்துக்கு ஆளான கொடுமை நிகழ்ந்துள்ளது. கிருஷாந்தி பாலியல் படுகொலை வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டும்,தப்பி ஓடவிடப்பட்டும் வரும் நிலையில் புதிய பாலியல் வெறித்தனம் பற்றிய வழக்கு. ஆனால் இதை முளையிலேயே கிள்ளிவிட படைத்துறைத்தலைமை முனைந்துள்ளது. வாய் பேசமுடியாத காதுகேளாத அதே வேளை, கண்கள் கட்டப்பட்டு பாலியல் பலாத்காரத்திற்கு ஆளான பெண்ணால் குற்றவாளிகளை இனங்காட்ட முடியாது. அதனால் இராணுவத்தினர் இதில் சம்பந்தப்படவே இல்லை, இதுவே, பலாலி இராணுவத்தலைமையகத்தின் தீர்ப்பு.

ஆனால் இவர்களுக்கெல்லாம் தீர்ப்பு வழங்குபவர் அவர்கள் என்றும், அவர்களின் தீர்ப்புக்காக காத்திருந்தால் மாத்திரமுமே ஏமாற்றமும் கவலையும் மனக்குமுறலும் கொந்தளிப்பும் ஏற்படும். ஆனால் தீர்ப்பு வழங்குவது எம்மவர்களே, உரிய தண்டனை கிடைக்காமல்போகாது, இந்தக் கிரகங்களின் சேஸ்டைகளுக்கெல்லாம், இறுதிப்பலன் உண்டு.

## பத்திரிகையாளருக்கு சன்மானம்

ரஜனியின் வீட்டில் நடைபெற்ற பிரஸ் மீட்டிங்கிற்கு போன பத்திரிகையாளர்களுக்கெல்லாம் முதலில் ஒரு கவர் தரப்பட்டது. அதில் 2000 ரூபாய்கள் இருந்தன. இதில் அதிர்ச்சியடையவோ திடுக்கிடவோ எதுவும் இல்லை. இது சினிமா உலகின் நீண்ட நாளைய வழக்கம். இது திரை யுலக கலாச்சாரம் ஏற்காத பத்திரிகையாளரும் உண்டு.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் அறிவுக் கோட்பாடு



அறிவியல் பற்றிய ஆராய்ச்சி முடிவை. 'அறிவுக் கோட்பாடு' என்று மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்கள் கூறுகின்றனர். அறிவைப் பெறுவதற்கான வழிகள், அறிவின் ஏற்புடைமை, அறிவின் பயன் என்பவை பற்றி எழும் சிக்கல்களுக்கு விளக்கம் தேடமுற்படுவது அறிவியல் கோட்பாடு. நாம் சமூகவியல் பற்றிக் கற்றால் அதனால் கிடைப்படு சமூக அறிவியல். விலங்கியலைக் கற்றால் அது விலங்கியல் எனப்படுகிறது. அதுபோல அறிவுபற்றிய சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டு ஆராய்வது, "அறிவு அறிவியல்" அவ்வாராய்ச்சியின் முடிவாக உருவாக்கப்படுவது அறிவுக் கோட்பாடு. மேலைத்தேயத்தவரின் இன்றைய உயர்விற்கு உறுதுணையாக அமைந்தது இந்த அறிவுக் கோட்பாட்டில் ஏற்பட்ட வளர்ச்சியே. மேலைத்தேய அறிஞர்கள் வகுத்ததைப் போல 'அறிவுக் கோட்பாடு' என்று பெயரிட்டு தமிழர்கள் எதையும் சொல்லவில்லை. ஆனால் இன்றைய மேலைத்தேய அறிஞர்களின் விளக்கங்களை அவர்களுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் தமிழறிஞர்கள் தந்திருக்கிறார்கள். மேலைநாட்டறிஞர்களின் அறிவுக் கோட்பாட்டு வடிவமைப்போடு தமிழர்களின் கருத்துக்களைப் பொருந்திப் பார்த்தால் அக்கருத்துக்களின் தொகுதியைத் தமிழர் அறிவுக்கோட்பாடு எனலாம்.

நாகரீக வளர்ச்சியும் சிறப்பும் மிக்க பழம்பெரும் சமுதாயத்தினரான தமிழரிடையே தத்துவ அமைப்புக்கள் மலர்ந்து மணம் வீசியிருக்க வேண்டுமென்பது வரலாற்றுண்மை. இதற்கான பல சான்றுகள் திருக்குறளில் கிடைக்கின்றன. 'அறிவு' தொடர்பான சொற்களைத் திருக்குறளில் 131 இடங்களில் திருவள்ளுவர் நேரடியாகப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் நாலே நாலு இடங்களில் மட்டும் 'அறிவறிவு' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். உலகம் கூறும் எல்லாவகையான அறிவுகளுக்கும் அப்பாற்பட்டு நிற்பது அறிவுக் கோட்பாடு பற்றிய அறிவு. திருவள்ளுவர் கையாளும் "அறிவறிவு" என்ற சொற்றொடர் தமிழரின் அறிவுக் கோட்பாட்டையே குறிக்கிறதெனலாம்.

> ஒரு மனிதன் ஒரு துறையில் சிறந்த அறிவுடையவனாகவும் பிறதுறைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவனாகவும் இருப்பதைக் காட்டிலும் எந்தத் துறைக்குச் சென்றாலும் அந்தத் துறையில் அறிவு பெருகும் ஆற்றலுடையவனாக இருப்பதே சிறப்பு.

ஒரு மனிதன் ஒரு துறையில் சிறந்த அறிவுடையவனாகவும் பிறதுறைகளாக அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாதவனாகவும் இருப்பதைக் காட்டிலும் எந்தத் துறைக்குச் சென்றாலும் அந்தத் துறையில் அறிவு பெருகும் ஆற்றலுடையவனாக இருப்பதே சிறப்பு. இதையே தமிழர்கள் அழுத்தமாக தமது அறிவுக் கோட்பாடாக வலியுறுத்தினர். எமக்கு என்ன சிறப்பிருந்தாலும் "அறிவறிந்த" மக்கட்பேறைத்தவிர மற்றயவை உயர்வாகக் கருதப்படமாட்டாது என்கிறது இக்குறள். இங்கு நாம் கூர்ந்து கவனிக்கவேண்டிய விடயம் அறிவுள்ள பிள்ளையல்ல; அறிவறிந்த பிள்ளையெனவே வலியுறுத்தப்படுவதைக் காணல் வேண்டும்; இது அறிவுக் கோட்பாடறிந்த பிள்ளையென விரிவடையும்.

முற்றுப் பெறாமல் வளர்ந்து செல்வதே அறிவின் இயல்பு. இதை அறிந்தவன் ஒருபோதும் இதுவரை தான் பெற்றிருக்கும் அறிவுத் தொகுதியை எண்ணிச் செருக்குறமாட்டான். மாறாக அடக்கமுடன் இருப்பான். ஆகவே அறிவறிந்து ஒருவன் செயற்பட்டால் அடக்கம் அவனது ஆபரமாக அமைந்துவிடும். இதற்கு ஆதாரமாக அமையும் குறள் "அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்" என்று குறிப்பிட்டுச் சொல்லக்காணலாம். அதேபோல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிவறிவுக் கோட்பாட்டினைச் சரிவர அறிந்தவன் செய்திகளைத் திரட்டும் வழியறிவான். திரட்டிய செய்திகளிலிருந்து முடிவுக்கு வருவான். தீர்க்கமான முடிவிற்கு வரமுடியாதவர்களை "அறிவறியார்" என்கிறது திருக்குறள். அத்துடன் அறிவறிவை உடையவன் சரியான ஏற்புடைய அறிவைப் பெறாவிடில் அவனை அறிஞர் பழிப்பார்கள். "அறிவறிந்து ஆள்வினையின்மை பழி" எனவும் வலியுறுத்துகிறார்.

ஒரு சமுதாயம் பெற்றுள்ள அறிவின் அளவு, ஆழம், இயல்பு, நுண்மை இவற்றுக்கேற்பவே அச்சமுதாயத்தின் நாகரீக வளர்ச்சியும் பண்பாடும் அமைகின்றன. சமுதாயத்தில் ஏற்படும் அரசியல் பொருளாதார அறிவியல் வளர்ச்சிகளுக்கெல்லாம் அறிவாராய்ச்சியே அடிப்படையான காரணம். அறிவாராய்ச்சிக்குச் சிறப்பிடம் தராத சமூகத்தின் நாகரீகமும் அழிந்துவிடும். இதை ஓர் கோட்பாடாக வரையறை செய்யாதுவிடினும் தலைமைக் கருத்தாக வலியுறுத்தும் பண்பு திருக்குறளிலும் அதற்கு முன் வந்த வேறு பல நூல்களிலும் இருந்தே ஆரம்பித்துவிட்டதெனலாம்.

அறிவுள்ள சமூகம் தன்னைக் காத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாகச் செயற்படும். ஓர் இனத்தை அழிக்க பகைவன் விரிக்கும் சகல சூழ்ச்சிகளையும் அது அடையாளம் கண்டு கொள்ளும். வஞ்சித்து வெற்றிகொள்ள முனைவோர் அவ்வினத்தை வெற்றிகொள்ளமுடியாது போகும். போர்க்களத்தில் கண்கள் சிவந்து பகைவன் படையைத் தடுத்து நிறுத்தும் வலிமை பெற்றோன் சான்றோன் என்கிறார் அவ்வையார். போர் வீரரை "நோன்புரித் தடக்கைச் சான்றோர்" எனக் கூறுகிறது பதிற்றுப்பத்து. சகல கலைகளையும் கற்று அறிந்தவன் களமாடுவதிலும் வல்லமை பெற்று விளங்குவான் என்பது கண்கூடு. இதனாலேயே "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்கிறார்கள். இதன் கருத்து நம் அறிவு நம்மை அழிவில் இருந்து காத்தல் வேண்டும். "சாகாமல் கற்பதே கல்வி" என்ற சொற்றொடரையும் நாம் இத்தோடு கவனித்தல் வேண்டும். நிலத்தின் இயல்பால் நீர் திரியும். அதேபோல நாம் பெற்ற அறிவின் அளவே அச்சமூகத்தின் தகுதியை நிர்ணயிக்கும். இந்த வகையில் எல்லாவற்றையும் உயத்துணர்ந்து காலத்தை வென்று வாழும் சீர்மையே தமிழர் கண்ட அறிவியல் கோட்பாடு எனலாம். **

## டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை வென்றது

1998–ம் ஆண்டிற்கான ஒஸ்கார் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் டைட்டானிக் திரைப்படம் 11 ஒஸ்கார் விருதுகளை வென்றுள்ளது. 28 வருடங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்ட பிரமாண்டமான பென்ஹேர் (Ben Hur) திரைப்படமே 11 ஒஸ்கார் விருகளை வென்றது. அதன் சாதனையை இப்போது டைட்டானிக் படம் 28 ஆண்டுகளின் பின் சமப்படுத்தியுள்ளது.

சிறந்த படம்– டைட்டானிக்
சிறந்த இயக்குனர்– டைட்டானிக்
சிறந்த திரையமைப்பு– டைட்டானிக்
சிறந்த படப்பிடிப்பு– டைட்டானிக்
சிறந்த ஆடையலங்காரம்– டைட்டானிக்
சிறந்த பின்னணி இசை– டைட்டானிக்
சிறந்த பாடல்– டைட்டானிக்
சிறந்த எடிட்டிங்– டைட்டானிக்
ஒலிப்பதிவு– டைட்டானிக்
ஒலி– எபசிட்– டைட்டானிக்
கலைத்துவத் தாக்கம்– டைட்டானிக்
சிறந்த நடிகன்– ஜாக் நிக்சன்
சிறந்த நடிகை– ஹெலன் ஹன்ற்
சிறந்த துணை நடிகன்– கிம் பேசிங்கர்
சிறந்த திரைக்கதை– குட்வில் ஹன்ரில் (திரைப்படம்)
சிறந்த வெளிநாட்டுப் படம்– கரக்கடர் (கொலண்ட்)
சிறந்த ஒப்பனை– மான் இன் பிளாக்


படம் 1

படம் 1– ஜேம்ஸ் கமரூன் டைட்டானிக்– இயக்குனர்.
படம் 2– சிறந்த நடிகர் ஜாக் நிக்கல்சன் ஜாக் நிக்கல்சனுடன் ஜோடியாக நடித்த நடிகைகள் மூன்று தடவைகளும் ஒஸ்கார் விருதுகளை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


படம் 1



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மழை பெய்து கொண்டிருக்கின்றது
எல்லையற்று விரியும்
வெளி!

# அகதியின் கப்பலும்



ஆழ் துயரோ நெஞ்சுள்
மெல்லென கிளர்கிறது
கோடித் தந்திகளின்
நாதப் பெய்வில்
பால் நிலவு உறைந்திருக்க
பகர்ந்த வாழ்வின் இசை
கூட்டுகிறது.

நானும் என் தோழர், தோழிகளுமாய்
காகிதத்தில் கப்பல் செய்த
கால நினைவு
அலை அலையாய் நெஞ்சக்
கரையெங்கும் வரைகிறது.

சிணுங்கலாகவும்
சீற்றமெனவுமாகிய காற்று
எங்கள் கப்பல்களைக்
கொண்டு போனதை
வலி தாளா நெஞ்சு
வீணையென மீட்டுகிறது

கை, மனம் வயப்பட
கட்டிய கப்பல்
வெள்ளிகளும் பூக்காத
வானத்தின் கீழே மிதந்தன

கண்ணீரில் நனைந்தன — சில
காலடிகளுக்குள்ளும்
நசுங்கித் தொலைந்தன!

காற்றசைக்க சில கரையொதுங்கின
புயலடிக்க சில எதிர் நீந்தின
நீருள் அமுங்கின
திசைகள் கெட்டு
திக்கும் பரவியும்
போயின போயினவா?

காதலாகி நின்று கட்டிய
கப்பல் போலல்லவா
இன்று
எமது வாழ்வும் ஆயிற்று

சிக்கித் தவிக்கின்ற
சீவனைச் சிலுவையெனச் சுமந்தபடி
திக்குகளை குழப்பமின்றி
பார்க்க கூடுதலுமின்றி
சூனியத்துள் நுழைந்தோம்
சர்வேசா?
உயிரணைய

# கால நதிக் கரையும்

நங்கூரமும் உடைந்து
பனிப்புயல் வீசுகின்ற
கட்டிடக் காட்டிடையே கப்பல்
சிக்கியது எங்கனம்?

வாழ்வெனும் வண்ணக் கப்பல்
காலநதிக் கரை நீந்திச் சேர
காலதேவா
கைகொடுப்பாயா?

— சுபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடும் மக்களும்



நிலப்பரப்பு– 356,730 ச.கி.மீ
சனத்தொகை – 81,187,000
தலைநகர் – பொன் (Bonn)
அரசமொழி – ஜேர்மன்
பிரதான மதம் – கிறிஸ்தவம்
நாணயம் – டொச்மார்க்
பிரதான ஏற்றுமதி – இயந்திரங்கள், போக்குவரத்து உபகரணங்கள், புடவை இரசாயணப் பொருட்கள், இரும்பு, உருக்கு, பழரசம்.





## ஜேர்மனி

ஜேர்மனி ஐரோப்பாவின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. பிரான்ஸ், லக்ஸம்பேர்க், பெல்ஜியம், நெதர்லாந்து, டென்மார்க், போலந்து, செக்குடியரசு, ஆஸ்திரியா, சுவிற்சலாந்து ஆகிய நாடுகள் ஜேர்மனியைச் சுற்றி அமைந்துள்ளன.

ஜோர்மனியில் 16 மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலங்களுக்கும் தமக்கான அரசுகளைக் கொண்டுள்ளதுடன் பிரதிநிதிகளை ஜேர்மனியின் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கும். ஒவ்வொரு மாநிலமும் கல்வி, மாநில நடவடிக்கைகளிற்கென தமக்கான சில சட்டவிதிகளைக் கொண்டுள்ளன. ஆனாலும் பாராளுமன்றமே தேசிய சட்டங்களை நிர்ணயிக்கும் உரிமை கொண்டது. அரசின் தலைவர் அதிபர் (Chancellor) என அழைக்கப் படுகின்றார்.

ஜேர்மனியின் விஞ்ஞானிகள் இராசயன, பௌதிக, மருத்துவத் துறையில் பல முக்கியமான கண்டு பிடிப்புக்களைச் செய்துள்ளனர்.

இரண்டாம் உலகயுத்தத்தின் போது இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஜேர்மனி 1990– இல் மீண்டும் இணைக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது சிதைந்த மேற்கு ஜேர்மனியின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் உதவி வழங்கின.



பெரும்பாலான ஜேர்மனிய மக்கள் நகரங்களை அண்டிய பகுதிகளிலேயே வாழ்கின்றனர். சிறியளவிலான ஜேர்மனியர்களே கிராமப் புறங்களில் வாழ்கின்றனர்.

1950– களிலிருந்து துருக்கி, இத்தாலி, யூக்கோஸ்லாவியா ஆகிய நாடுகளிலிருந்து பெரும்பான்மையான மக்கள் ஜேர்மனுக்குள் வேலை தேடி வந்தனர். 40–ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் அங்கு வசிக்கின்றனர்.

ஜேர்மனி ஐரோப்பாவில் வர்த்தகத் துறையில் முன்னணியில் நிற்கும் ஒரு நாடாகும். ஐரோப்பாவில் பெருந்தொகையானதும் தரமானதுமான கார்களை உற்பத்தி செய்யும் ஒரு நாடாகவும் ஜேர்மனி விளங்குகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லண்டனில்

# அதி உயர் விருது பெற்ற தமிழீழக் குடிமகன்

## டாக்டர் நமசிவாயம் சத்தியமூர்த்தி

**லண்டனில் அதி உன்னத கௌரவம் கிடைத்திருக்கும் இவரே இந்த கௌரவத்தைப் பெறும் முதலாவது இலங்கையர் ஆவார்**

லண்டனில் வாழும் தமிழீழக் குடிமகன் டாக்டர் நமசிவாயம் சத்தியமூர்த்தி (டாக்டர் என்.எஸ்.மூர்த்தி) அவர்கள் “லண்டன் மாநகரின் சுதந்திரப் பிரஜை” (FREEMAN OF THE CITY OF LONDON) என்ற அதி உயர் கௌரவத்தைப் பெற்றுள்ளார். லண்டனில் அதி உன்னத கௌரவம் கிடைத்திருக்கும் இவரே இந்த கௌரவத்தைப் பெறும் முதலாவது இலங்கையர் ஆவார்.

இந்த கௌரவ விருது முன்னர் இளவரசி டயானா, ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா, மறைந்த இந்தியப் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு, முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் மாக்ரட் தச்சர் போன்றவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

மாற்றீடு மருத்துவத் துறையில் நிபுணரான கலாநிதி டாக்டர் என்.எஸ். மூர்த்தி லண்டனில் பல்வேறு இன மக்களிடையே மாற்றீடு மருத்துவத் துறையில் அளப்பரிய சேவையாற்றிவருவதால் இந்த உயர் கௌரவ விருதைப் பெறும் பெருமையைப் பெற்றுள்ளார். டாக்டர் என்.எஸ். மூர்த்திக்கு இக் கௌரவ விருது வழங்குவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் ஜேர்




**இந்தியாவில் இருந்தபோது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்களிற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.**

மன் அதிபர் ஹெல்மட்கோல் அவர்களிற்கு இரத்தம் சிந்தாமலே கிழக்கு மேற்காகப் பிரிந்திருந்த இரு ஜேர்மனிகளையும் ஒன்றிணைத்த சேவைக்காக இந்தப் பெருமைக்குரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

1815–ம் ஆண்டு “வாட்டர்லூ” யுத்தத்தில் தளபதி வெலிங்டனுக்கு வழங்கப்பட்ட கௌரவமே தற்போது டாக்டர் என்.எஸ். மூர்த்திக்கு வழங்கப்பட்டிருப்பது ஈழத்தமிழரின் செயல்திறனுக்கு கிடைத்த கௌரவமாகவே நாம் கொள்ளலாம்.

FREEMAN என்ற விருது பெறும் டாக்டர் என்.எஸ்.மூர்த்தி கடந்த 21 ஆண்டுகளாக மாற்றீடு மருத்துவத் துறையில் சேவையாற்றி வரு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிறார். தமிழ் மக்களைவிட மேலைத்தேய மக்கள் இந்தமருத்துவத்தின் விளைவுகளை அறிந்து டாக்டர் மூர்த்தியிடம் அணுகி நல்ல பெறு பேறுகளைப் பெற்று வருகின்றனர். மேலைத்தேய மக்கள் தமிழ் டாக்டர் ஒருவரின் திறமைகளை அறிந்து பயன்படுத்திவருவது பெருமைக்குரிய விடயம்.

தமிழீழ விடுதலையிலும் ஆர்வம் கொண்டுள்ள இவர் தமிழீழத்தில் மாத்திரமல்ல தென் இந்தியாவிலும் தமிழீழ மக்களிற்காக சேவையாற்றியுள்ளார். 1989-இல் இங்கிலாந்திற்குப் புலம் பெயர்வதற்கு முன்னர் 4 ஆண்டுகள் இந்தியாவில் இருந்த போது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்களிற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

இவர் மாற்றீடு மருத்துவத் துறையில் செய்த அற்புத சாதனைகளால் இவருடைய திறமைகள் வெகு வேகமாக இங்கிலாந்தில் பரவியது. கடந்து ஆண்டு பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் தமது மாளிகைக்கு இவரை விருந்தாளியாக அழைத்து விருது வழங்கி கௌரவித்துள்ளார். லண்டனில் இருந்து வெளியாகும் பல பத்திரிகைகள் இவரது திறமையைப் பாராட்டியிருந்தன.

லண்டனில் டூட்டிங் (TOOTING) பிரதேசத்தில் தனது மருத்துவமனையை வைத்திருக்கும் இவர் லண்டனில் மொத்தம் ஐந்து மருத்துவ மனைகளில் மாற்றீடு மருத்துவத்துறையில் சேவையாற்றி வருகிறார்.

தமிழீழ மண்ணில் நமது மக்கள் படும் அவலங்கள் பற்றி அவ்வப்போது இங்கிருந்து கொண்டு குரல் கொடுக்கும் தேசப்பற்றுமிக்க இந்த மனிதனின் சேவை தொடரவேண்டும்.

டாக்டர் மூர்த்தியின் தன்னலமற்ற சேவைக்குக் கிடைத்த இந்த கௌரவம் தமிழர் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டிய விடயமாகும்.

❋❋

# நாவலும் நுகர்வும்




கேரளாவைச் சேர்ந்த மலையாள இளம் பெண் ஒருவர் எழுதிய இந்த ஆங்கில நாவலின் பெயரைத் தமிழில் தருவது எளிதல்ல. 'எளிமையின் தேவன்' என்பது ஓரளவுக்குப் பொருந்தும் என எண்ணுகின்றேன்.

புதுமையும் நளினமும் சேர்ந்து கவிதையின் கனம் கமழும் இவருடைய எழுத்துநடை, ஆங்கில மொழிக்குப் புதியதோர் பரிணாமத்தை அளிக்கின்றது. இவர் பெண்ணென்பதால், நாவலின் நாயகியான அம்முவின் உணர்வுகளை மிகத் தெளிவாகவும், நுட்பமாகவும் சொல்ல முடிகின்றது. கதையைச் சொல்லிச் செல்லும் முறையில்கூட ஒரு புதிய உத்தியை இந்த நாவல் கொண்டுள்ளது. வழமையாக கதையின் உச்சக் கட்டத்தை நாம் கதையின் முடிவிலேதான் காண்பதுண்டு. ஆனால் இந்த நாவலில் நடக்கப் போகும் பாரதூரமான விஷயங்களை, மிக இயல்பாகக் கதையின் ஆரம்பத்திலிருந்தே, இடையிடை, இரண்டொரு வார்த்தைகளில், தூவிச் செல்லும் வித்தை வாசகரைக் கதையுடன் கட்டிபோட்டு போடுகின்றது. மேற்குலகினதும், பிறந்த மண்ணினதும் அன்னியோன்னிய பரிச்சயமும், இவ்விரு பகுதி மக்களினது தன்மைகள் பற்றி ஆழமான புரிந்துணர்வும், இயல்பாகவே வாய்க்கப்பெற்ற அருந்ததி ராயின் இந்த நாவல் பெருமளவு விற்பனையானதும், பலரின் பாராட்டுக்களையும், புக்கர் பரிசையும் பெற்றது அதிசயமில்லைத்தான்.

இயேசுவின் சீடரான தோமஸ் தெரிந்தெடுத்து மதம் மாற்றிய நூறு பிராமணர்களின் சந்ததியினர் தாங்கள் என்று சொல்லும் கிறீஸ்தவர்கள்தான் கதையின் கதாநாயகியான அம்முவின் குடும்பத்தினர். அவர்களின் மதமாற்றம் உண்மையில் அவர்களிடையே இருந்த ஆதிப் பிராமண விதிகளைத் துறக்க வைக்கவில்லை. இந்தப் பின்னணியோடு நகர்கிறது கதை. மையக் கதைகளுடன் சேர்த்துப் பின்னப்பட்ட பல அற்புதக் கதைகளும் இந்த நாவலில் உண்டு. குறிப்பாக மூத்த தலைமுறைக் கதக்களி நடனக் கலைஞர்கள் பற்றிய ஆழமும் அனுதாபமும் நிறைந்த சொற்சித்திரத்தை உதாரணமாகக் கூறலாம். சில இடங்கள் பொறுமையைச் சோதிக்கும் வகையில் இருந்தாலும், புதிய அனுபவத்தை வழங்கும் ஒரு நல்ல படைப்பு. முக்கியமாக, புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளிகள் நிச்சயம் படிக்கவேண்டிய சிறந்த படைப்புக்களில் இதுவும் ஒன்று. புகுந்த நாட்டின் மண்ணையும் மக்களையும் விழிப்புடன் உள்வாங்கவும், பிறந்த மண்ணின் புதிய தேவைகளை இனங்காணவும், இவைவழி நின்று நவமான ஆக்கங்களைப் படைக்கவும் இந்நாவல் துணைசெய்யும் என்பதில் சந்தேகமில்லை.

அ. பாலமனோகரன்





# உலகக் கிண்ணம் 1998

**1998** உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் பிரான்ஸ் நாட்டில் நடைபெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. இதற்கென 10 நகரங்களில் உதைபந்தாட்ட மைதானங்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

ஜூன் 10–ம் திகதி ஆரம்பமாகும் இப்போட்டியின் இறுதி ஆட்டம் ஜூலை 12–ம் திகதி மாலை 9.00– மணிக்கு செயின்ட் டெனிஸ் மைதானத்தில் ஆரம்பமாகும். ஆரம்ப ஆட்டமும் இதே மைதானத்திலேயே நடைபெறவுள்ளது. இதில் பிறேசிலும் ஸ்கொட்லாந்தும் மோதுகின்றன. மிகவும் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள இம் மைதானத்தில் 80.000 இருக்கைகள் உள்ளன. வாகனங்கள் நிறுத்துவதற்கும் நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

32 நாடுகள் கலந்து கொள்ளும் இந்த 1998 உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்கா, நைஜீரியா, ஈரான், ஜப்பான், குரேசியா போன்ற நாடுகள் முதல் தடவையாக பங்குபற்றுகின்றன. பிறேசில் 15 தடவைகளும், ஜேர்மனி 14 தடவைகளும், இத்தாலி 13 தடவைகளும் ஆர்ஜென்ரீனாவும் மெக்சிகோவும் 11 தடவைகளும், பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து, யூக்கோஸ்லாவியா ஆகியவை 9 தடவைகளும் கலந்துகொண்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1994–ல் அமெரிக்காவில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் பிறேசில் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. 1990–ல்



ஜேர்மனி உலகக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் கணிப்பின்படி பிறேசில் முதலாவது இடத்திலும், ஜேர்மனி இரண்டாவது இடத்திலும் உள்ளன.

பிரான்சில் போட்டிகளுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இப்போட்டியை அல்ஜீரியத் தீவிரவாதிகள் குழப்பலாம் என்ற அச்சமும் இருந்து வருகின்றது. பிரெஞ்சுப் பொலிசாரும் சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் திறமையாகச் செய்து வருகின்றனர்.

இறுதிப் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுக்கள் யாவும் ஏற்கனவே விற்பனையாகிவிட்டன.

## உதைபந்தாட்டப்



**பாரிஸின் புறநகர்ப் பகுதியான செயின்ட் டெனிஸ்-இல் 1998 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கென விஷேடமாக அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகளைக் கொண்ட மைதானம்**
















# உலகக் கிண்ண உதைபந்தாட்டம் மோதும் நாடுகள் பற்றிய விபரம்.

| நாடு | உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொண்டது | தரம் | விளையாடும் வீரர்கள் |
|---|---|---|---|
| பிறேசில் | 15 | 1 | 5,760,000 |
| ஸ்கொட்லாந்து | 7 | 37 | 150,000 |
| மொறோக்கோ | 2 | 15 | 88,000 |
| நோர்வே | 2 | 13 | 280,000 |
| இத்தாலி | 13 | 9 | 528,186 |
| சிலி | 7 | 16 | 1,800,000 |
| கமறுன் | 4 | 53 | 98,310 |
| ஆஸ்திரியா | 7 | 25 | 260,000 |
| பிரான்ஸ் | 9 | 6 | 2,002,684 |
| தென்னாபிரிக்கா | முதல்தடவை | 31 | 842,400 |
| சவுதி அரேபியா | 2 | 33 | 16,150 |
| டென்மார்க் | 2 | 8 | 273,000 |
| ஸ்பெயின் | 9 | 11 | 527,226 |
| நைஜீரியா | முதல்தடவை | 71 | 64,025 |
| பரகுவே | 4 | 29 | 300,000 |
| பல்கேரியா | 7 | 36 | 53,081 |
| நெதர்லாந்து | 7 | 22 | 1,000,000 |
| பெல்ஜியம் | 5 | 41 | 453,000 |
| தென்கொரியா | 5 | 27 | 736,000 |
| மெக்சிக்கோ | 11 | 5 | 4,400,000 |
| ஜேர்மனி | 14 | 2 | 6,200,000 |
| அமெரிக்கா | 6 | 26 | 16,600,000 |
| யூக்கோஸ்லாவியா | 9 | 20 | 125,000 |
| ஈரான் | முதல்தடவை | 46 | 3,900,000 |
| ருமேனியா | 7 | 7 | 150,000 |
| கொலம்பியா | 4 | 10 | 406,000 |
| இங்கிலாந்து | 9 | 4 | 1,500,000 |
| டுனிசியா | 2 | 23 | ? |
| ஆர்ஜன்ரீனா | 11 | 17 | 1,800,000 |
| ஜப்பான் | முதல்தடவை | 14 | 900,000 |
| ஜமேக்கா | 2 | 96 | 9,419 |
| குரேசியா | முதல்தடவை | 117 | 82,000 |

www.tamilarangam.net



டென்மார்க்

# சர்வதேச மாநாடு

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி கொப்பனேகனில் நடந்த மாநாடு

தமிழீழ விடுதலைப்போராட்டம் தளத்திலே மிகவும் வேகமாக முன்னெடுத்துச் செல்லப்படும் வேளையில் வெளிநாடுகளிலும் போராட்டத்திற்கு ஆதரவான செயற்பாடுகள் மிகவும் வேகமாக செயற்படுத்தப்படவேண்டியதன் முக்கியம் சகலராலும் உணர்ந்துகொள்ளப்படவேண்டிய ஒன்றே.

இதன் ஒரு கட்டமாக டென்மார்க்கின் தலைநகர் கொப்பனேகனில் மார்ச் 7–ம் திகதி நடைபெற்ற தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு பல அரசியல்வாதிகளையும் பங்குபெறச்செய்து. தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வலியுறுத்தி நின்றது.



டென்மார்க்கின் முன்னாள் பிரதமர் அங்கர் ஜொகன்சன் அவர்கள் மாநாட்டை ஆரம்பித்துவைத்து சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில் தான் தமிழர்களின் விடயத்தில் அதிக அக்கறையுடன் இருப்பதாகக் கூறியதுடன் சுதந்திரம் மறுக்கப்படும் போது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நாளும் போராடவேண்டும் என்று தமிழர்களைத் தான் கேட்டுக் கொள்வதாகக் கூறினார்.

**சுதந்திரம் மறுக்கப்படும் போது சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நாளும் போராடவேண்டும் என்று தமிழர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நியாயப்படுத்தி தமிழீழத்திற்கான அங்கீகாரத்தைப் பெறு



வதற்கு வெளிநாடுகளில் வெறும் பிரச்சாரங்கள் மாத்திரம் பலனளிக்காது, நேரடியாக அரசுகளை, அரச பிரதிநிதிகளை அணுகி எமது போராட்டத்திற்கு ஆதரவு பெறும் நடவடிக்கைகள் நிச்சயமாக வெற்றியை அளிக்கும் என்று கொப்பனேகன் மாநாடு எமக்கு ஒரு உண்மையைத் தெளிவாக்கி உள்ளது.

மாநாட்டில் கலந்து கொண்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் யாவரும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் தமது ஆதரவைத் தெரிவித்துமே பேச்சுக்கள் வழங்கியிருந்தனர். இவர்களது இந்த நிலைப்பாட்டிற்கு இவர்களுடன் நேரடியாகத் தொடர்பை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக நேரடியாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**தமிழர்களுக்கு எதிரான ஒளிவு மறைவான இன அழிவுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதுடன், தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வழிசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றது.**

கலந்துரையாடல்களை மேற்கொண்டதே காரணம் என மாநாட்டை ஒழுங்கு செய்தவர்கள் கூறியிருந்தனர்.

மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தவர்கள் டென்மார்க்கிலுள்ள தமிழர்களின் அமைப்புக்களை ஒருங்கிணைத்து செயற்படும் அமைப்பான டென்மார்க் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியம் ( DANISh FERDERATION OF TAMIL ASSOCIATIONS) இதன் செயலாளராக கடமையாற்றும் டெனிஸ் பிரஜையான டொறிற் புறுசெலியஸ் (Dorrit Bruselius) தமிழர்களின் போராட்டத்தின் நியாயத்தை முழுமையாக உணர்ந்திருப்பதுடன் அமைப்பிலுள்ள ஏனைய தமிழர்களுக்கும் டெனிஸ் அரசுமுறை பற்றிய தெளிவான விளக்கங்களையும் நடைமுறைகளையும் அவ்வப்போது கூறிவருகிறார். இம் மாநாட்டை நடாத்தி முடிக்கும் முழுப் பொறுப்பையும் இந்தப் பெண்மணியே நேரடியாக






ஏற்றிருந்தார். இம் மாநாட்டின் வெற்றிக்கு இப் பெண்மணியின் அயராத உழைப்பும் ஒரு காரணியாக அமைந்திருந்தது.

மாநாட்டை ஆரம்பித்து வைத்தவர் முன்னாள் பிரதமராக இருந்தாலும் தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதுடன் டெனிஸ் மக்களிடம் மிகுந்த செல்வாக்கு உடையவராகவே இருக்கின்றார். இம் மாநாட்டிற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி, டெனிஸ் அகதிகள் சங்கப் பிரதிநிதி, மற்றும் டெனிஸ் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோருடன் டெனிஸ் அரசவைக் கலைஞரான கீற்றா நோர்பி–யும் இம் மாநாட்டில் கலந்துகொண்டார்.

தமிழர்களின் சார்பில் அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல், அருட்தந்தை இராஜன் திருச்செல்வம், சர்வதேச தமிழர் ஒன்றியத்தின் தலைவர் ஜேம்ஸ் கரன், மனித உரிமைகளுக்கான தமிழர் நிலைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லண்டன் கிளையைச் சேர்ந்த செல்வி. மான், மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் இங்கிலாந்தைச் சேர்ந்த டியற்றி மக்கொனல், சிங்கள எழுத்தாளர் விராஜ் மென்டிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டின் நிகழ்ச்சிகளை ஸ்ரீன் ஹைன்சின் என்பவர் தொகுத்து வழங்கினார். இவர் தமிழர்களின் உரிமைக்காக உள்நாட்டு ரீதியாக குரல்கொடுக்கும் ஒரு முக்கியமான பிரமுகர் என்பதுடன் டென்மார்க் தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும் செயற்படுகிறார். இம் மாநாட்டின் முடிவில் பின்வரும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

1– தமிழர்களின் அரசியல் சுதந்திர உரிமையை அங்கீகரித்தல்.

2– 1, தமிழ்ப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல இராணுவ செயற்பாடுகளையும் உடன் நிறுத்துதல்.

2, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தை திரும்பப் பெறுதல்.

3– தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுதல்.

4– தமிழர் தாயகத்தின் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குதல்.


5– தமிழர் பிரதேசத்தில் சுதந்திரமான செய்தி நிறுவன செயற்பாட்டை ஏற்படுத்துதல்.

இம் மாநாடு டென்மார்க் அரசினுடைய ஜனநாயக சர்வதேச முக்கிய செயற்பாடுகளை அடையாளம் காட்டி ஐரோப்பியப் பாராளுமன்றத்தில், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அமைப்புகள் என்பவற்றில் டென்மார்க் நன்மை பயக்கும் வகையில் தலையிட்டு சிறீலங்கா அரசினுடைய தமிழர்களுக்கு எதிரான ஒளிவு மறைவான இன அழிவுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதுடன், தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிடைக்க வழிசெய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றது.

இதுபோன்ற மாநாடுகள் வெளிநாடுகளில் நடாத்தப்படுவதால் எமது போராட்டதின் நியாயத்தை வெளிநாட்டு மக்களிற்கு உணர்த்தி எமது போராட்டத்தை வென்றெடுக்கமுடியும் .

**

# புலியின் வடிவமே கார்களுக்கும் பாதுகாப்புத் தரும்!



இந்தக் கார் காட்டு வழியில் சென்றால் மிருகங்கள் கூட்டம் கூட்டமாகப் பயந்தோடுகின்றன. மிருகங்களால் வரும் அச்சத்தைத் தவிர்த்துக் கொள்ள எனது காரை இப்படியான வர்ணத்தில் அமைத்துக் கொண்டேன் என்கிறார் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கீஸ் காபோர். தோற்றத்தில் மட்டுமல்ல ஓடும் வேகத்திலும் (120 குதிரைச் சக்தி) புலி போலவே இதன் மோட்டார் உருவாக்கப்பட்டுள்ளது. பேர்மிங்காமில் நடைபெற்ற சிறு கார்களுக்கான சர்வதேசக் கண்காட்சியில் கலந்து கொண்ட இக்கார் பலரது கவனத்தைக் கவர்ந்துவிட்டது. "காட்டு வழியில் பாயும் புலி" என்ற பெயர் கொண்ட இந்த வகைக் கார்கள் விரைவில் விற்பனைக்கு வர இருக்கின்றன. மிருகங்களை விரட்டும் இக்காரை சில இடங்களில் ஓடினால் மனிதர்களையும் விரட்டிவிடலாம். என்ற விடயத்தை ஹங்கேரி நாட்டுக் கீஸ்காபோர் அறிந்திருப்பாரோ தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மனிதன் என்பவன் தெய்வமா கலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் மனிதன் என்பவன் மிருகமாகலாம் என்பதற்கு காரணமாகிவிட்டது இந்தச் சிறுவனின் வாழ்வு.

# பிறப்பில் பலவிதம்

அடர்ந்த காட்டில் மனிதக் குரங்குகளுடன் வாழ்ந்த சிறுவன். குரங்குகளிடமிருந்து பிரிந்தாலும் மனிதர்களுடன் வாழ முடியவில்லை. விலங்கியல் தோட்டத்தில் சிறைக் கம்பிகளுக்கிடையில் கழியும் அவனது வாழ்வு. அவன் மெல்ல மெல்ல மனிதனாக மாறக்கூடும் என்கிறார்கள் வைத்தியர்கள்.

மனிதன் என்பவன் தெய்வமா கலாம் என்று கூறுகிறார்கள். ஆனால் மனிதன் என்பவன் மிருகமாகலாம் என்பதற்கு காரணமாகி விட்டது இந்தச் சிறுவனின் வாழ்வு. ஆபிரிக்காவிலே உள்ள உகண்டாவின் பயரங்கரக் காடுகளுக்குள் வேட்டையாடச் சென்றவர்கள் மனிதக் குரங்குகளோடு குரங்காக இந்தச் சிறுவனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் சிறுவன் கானகத்திற்குள் எப்படி வந்தான்? குரங்குகள் எப்படி இவனை தம்மோடு சேர்த்துக் கொண்டன என்பவை புதிராகவே உள்ளன. மனிதர்கள் என்றாலே என்னவென்று தெரியாத நிலையில் இருக்கும் இவனை வெளியில் நடமாடவிடுவது ஆபத்து என்பதால் பாதுகாப்பான கூண்டில் அடைத்தே வைத்துள்ளனர்.

சுமார் எட்டு அல்லது ஒன்பது வயது மதிக்கத்தக்க இச்சிறுவனுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் பொபி. *1996–ம்* ஆண்டு மே மாதம் முதலாம் திகதி இவன் கண்டுபிடிக்கப்பட்டான். கடந்த *20* மாதங்களாக இவனை மனிதனாக்கப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் வைத்தியர்கள். உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் உள்ள உயிரியல் விலங்குத் தோட்டத்தின் சிறைகளுக்குள் வாழும் இச்சிறுவன் மனிதர்களைக் கண்டால் கடிப்பது. நகங்களால் கீறிக்கிழிப்பது. பெருங்குரலெடுத்து ஓலமிடுவது போன்ற செயல்களையே தொடர்ந்தும் செய்து வருகிறான். பயங்கரமான இந்தச் சிறுவனை மெல்ல மெல்லவே மனிதனாக்க முயலவேண்டும் என்கிறார் வைத்தியரான புற்றாலா என்பவர். அதுவரை இவனுக்கு சிறை வாழ்வைத் தவிர வேறெதுவும் கிடைக்கப் போவதில்லை. இப்படி ஓர் சிறுவனை சிறை வைப்பது மனித உரிமைக்குப் பொருந்திவருமா? என்பது இப்போது தோன்றியுள்ள கேள்விக் குறி. இருந்தாலும் மாற்றுவழி கிடைக்கவில்லை. இதனால் மனித உரிமை நிறுவனங்களும் அவனை வெளியில் விடுவது ஆபத்து என்பதை ஒத்துக் கொண்டுள்ளன.

மனிதனின் வாழ்வைத் தீர்மானிப்பதில் அவன் வாழும் சூழல் மிகவும் பிரதானமானது என்று ஏற்கனவே கூறியிருக்கிறார் உலகப்புகழ் பெற்ற உளவியலாளரான சிக்மன் பிராய்டு. பொபியின் வாழ்க்கையையும் அவன் வாழ்ந்த சூழலே தீர்மானித்திருக்கிறது. இதை நிறுவுவது போல மேலும் சில சம்பவங்கள் உலகில் நடந்துள்ளதையும் மறுப்பதற்கில்லை. மனிதர்களிலேயே விலங்குவடிவில் சிலர் பிறப்பதுமுண்டு. அப்படியானவர்கள் விலங்குகள் போல இருப்பதில்லை. கீழே தரப்பட்டுள்ள படம் ஓநாயின் வடிவில் பிறந்துள்ள ஓர் சிறுவனுடையது. இச்சிறுவன் மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்தவன். இன்றும் சாதாரண மனிதனாகவே வாழ்ந்துவருபவன். தற்போது புதிய சத்திர சிகிச்சை முறையால் இவனது முகத்தை மனித முகமாக மாற்றி விடலாம் என்று கூறியிருக்கிறார்கள் வைத்தியர்கள். இச்சிறுவன் பொபியைப் போல குணம் கொண்டவனல்ல. மனிதர்களுடன் வாழும் வாழ்வுச் சூழல் அவனை மனிதனாக்கியிருக்கிறது.



**நன்றி. எச். எஸ். கொல்ஸ்ற்
ஜிம்மி டொட்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்

## 47 வருடங்களாக ஒட்டி வாழும் சகோதரிகள்

### எதிலுமே உடன்பாடில்லை! பிரிந்து செல்லவும் வழிஇல்லை!! எங்கே எமது அம்மா?




பெற்ற தாயையும் தெரியாமல் பிரிந்து வாழவும் முடியாமல் 47 ஆண்டுகளைக் கடந்துவிட்டனர் மாச்சாவும், டாச்சாவும். மொஸ்கோவிலுள்ள அனாதைகள் பராமரிப்பு நிலையத்தில் தொடர்கிறது இவர்களின் போராட்டம் நிறைந்த வாழ்க்கை. இவர்களைப் பெற்றவள் எப்படி வளர்ப்பதென்று தெரியாமல் அனாதை விடுதியில் ஒப்படைத்துவிட்டு மறைந்துவிட்டாள். யாருமற்ற இருவரையும் தனியான பராமரிப்பு நிலையத்தில் வளர்த்து, ஆறு வயதின்பின் நடை பழக்கி வெளியுலகிற்கு விரட்டியிருக்கிறார்கள் வைத்தியர்கள்.

ஒரு கொடியில் இரு மலர்களாக நிற்கும் இவர்கள் இருவரும் ஒற்றுமையானவர்கள் அல்ல. வலது புறமுள்ள மாச்சாவிற்கோ கதைகண்ட இடம் கைலாசம். இடது புறமுள்ள டாச்சாவிற்கோ அமைதியே இன்பம். சிந்திக்கக் கூடியவர். தமது தாயைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்தை மாச்சாவிற்கு விளங்கப் படுத்தி முடிக்க தனக்கு 10 ஆண்டுகள் பிடித்ததென்று கவலைப்படுகிறார் டாச்சா. பிரிந்து செல்வதே தமக்கு விடிவு என்கின்றனர் எலியும் பூனையும் போல வாழும் இவ்விருவரும்.

47 வருடங்களுக்கு முன் ஒட்டிப் பிறந்தவர்களை வெட்டிப் பிரிக்கும் அளவிற்கு வைத்திய சிகிச்சை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இப்பொழுது செய்கிறார்கள்.

ஒட்டிப் பிறந்த பல குழந்தைகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். இதைச் செய்து கொள்ள நிறையப் பணம் வேண்டும். எம்மிடமோ அதற்கு வசதியில்லை. எனினும் அமெரிக்கா சென்றாவது நாம் நம்மைப் பிரித்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது எதிர்காலக் கனவு. அதற்காகவே நாம் எத்தனையோ சிரமங்களைத் தாங்கியபடியே வாழ்ந்து வருகிறோம் என்கிறார்கள். அவர்களின் அடுத்த கனவு யாரென்றே தெரியாத தமது தாயாரைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்பதாகும். அம்மா கிடைப்பாரா? இவர்கள் பிரிந்து செல்லவார்களா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். அதுசரி ஒட்டிப் பிறந்த இருவரே பிரிந்து செல்ல ஆசைப்படும் உலகில் சம்மந்தமில்லாத இரு இனங்களை இணைத்து ஒரு தீர்வுத்திட்டம் பண்ணும் பேர்வழிகளைப் பற்றி மாச்சாவும் டாச்சாவும் என்ன நினைப்பார்கள் என்பதை உங்கள் கற்பனைக்கே விட்டு வைக்கிறோம்.

ஒட்டிப் பிறந்த மூன்று ஜோடிக் குழந்தைகளும் பிறந்தது ஆபிரிக்காவில். படம் ஒன்றில் வயிறு ஒட்டிப் பிறந்த நலுலாவும் அவள் சகோதரியும். படம் இரண்டில் ஒட்டிப் பிறந்த பிரியானும் அவன் சகோதரன் பேர்னாட்டும். படம் மூன்று கதரினாவும் அவள் சகோதரி ஹெலனாவும்.


பிரியான் பிரான்சிஸ் சகோதரர்களும், கதரினா சகோதரிகளும் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் சுகமாக வாழ்கின்றனர். நலுலாவின் சகோதரி இறந்துவிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





ஆபிரிக்காவில் ஒட்டிப் பிறந்த மூன்று ஜோடிக் குழந்தைகள்

## மைக் தைசான் கடித்துத் துப்பிய காது வடிவில் சாக்லேட்!

உலக அதிபாரக் குத்துச் சண்டைப் போட்டியில் மைக் தைசன் தன்னோடு மோதிய ஈவாண்டர் கொலிபீல்டின் காதைக் கடித்துத் துப்பி





போட்டியிலிருந்து நீக்கப்பட்டதை அறியாதவர்களே கிடையாது. இப்போது அந்தச் சம்பவத்தை சாக்லேட்டாக்கி பணம் பண்ண முயன்றிருக்கிறார்கள். ஈவாண்டர் கொலிபீல்டின் காதின் அளவில் இது அமைந்திருக்கிறது. பற்களின் அடையாளம் மைக்தைசானின் அதேயளவில் உள்ளது. தைசான் 15 மில்லியன் டாலர்கள் தண்டம் செலுத்திய இந்தச் சம்பவத்தை நினைவூட்டும் இந்தச் சாக்கிலேட்டை நீங்களும் வேண்டிக் கடிக்க ஆசைப்படுகிறீர்களா விலை இரண்டேயிரண்டு டாலர்கள் மட்டுமே.

## கணக்கில் வராத பணம்

ஊரெங்கும் 'கறுப்புப் பணம், கறுப்புப் பணம்' என்று பேசிக் கொண்டார்கள். தங்கமணிக்கு அது என்னவென்று புரியவில்லை.

அவர் கையில் நூறு ரூபாய்க்கு ஒரு ரூபாய்க் கட்டு ஒன்று இருந்தது.

அதிகாரி ஒருவரைப் பார்த்து "ஐயா, கறுப்புப் பணம் என்றால் என்ன?" என்று கேட்டார் தங்கமணி.

"கணக்கில் வராத பணம்," என்று அதிகாரி சொன்னார்.

தங்கமணி தன்னிடமிருந்த ஒரு ரூபாய்க்கட்டை எண்ணிப்பார்த்தார். மொத்தம் தொண்ணூற்றொன்பது ரூபாய் தான் இருந்தது.

"ஓஹோ! ஒரு ரூபாய்க் கறுப்புப்பணம் போலிருக்கிறது!" என்று முணுமுணுத்தார் தங்கமணி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

# அடிவானத்து அழுகுரல்!

மடகும்பர எஸ்டேட்டை எப்படி மறப்பதென்று தெரியாமல் ஓடும் பஸ்சிலேயே சரிந்து கிடந்தான் செவஞானம்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கு வாரச்சந்தை கூடும். தமிழ் மலைநாடு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணமாகி ஒலிக்க, சிங்களம் கரையோரம் கண்டியாக உச்சரிக்கப்பட, போதாக்குறைக்கு ஆபீஸில் வேலை செய்வோரின் இங்கிலீசும் சேர்வதால் அந்தச் சந்தையிலிருந்து புது மாதிரியாக இரைச்சல் கிளம்பும்.

அந்த ஒலியின் முடிவில் "ஓம்" என்ற நாதம் பிறப்பதாகச் சிலர் சொன்னார்கள். செவஞானத்தால் அதைக் கிரகிக்கமுடியவில்லை. ஏனோ தெரியவில்லை இன்று அவனால்கூட கடையிரச்சலில் ஓர் கலை நயத்தை அனுபவிக்க முடிந்தது.



ஆர்தரைக் கண்டால் சிங்களவர்களே பயப்பிடுவதாகச் சொல்வார்கள். அந்தக் குட்டி நகரத்தில் எல்லாமே அவரைக் கேட்டுத்தான். அவரின் ஹோட்டலில் ரீ அடிப்பது, றொட்டி போடுவது இரண்டும் செல்வநாயகத்தின் வேலை. ஆதர் கடையில் வேலை செய்வதால் செல்வநாயகத்திற்கும் மற்றவர்கள் பயப்படுவது போலிருந்தது. அவனுக்கு வேறு சிலரும் எழுந்து இடம் கொடுக்க முன் வந்தனர்.

"ஊருக்குப் போறாப்பலே... பயணம் என்னிக்கு வாக்கிலே வெச்சிருக்கு?"

"போதேங்கெழம"

"நமக்குத் தெரியாமப் போச்சே! நேத்து சாயந்தரந்தா சுக்குறு கணக்குப்புள்ளே மவன் சொன்னா!

"ஏம்பா சிம்பேஞ்சி என்னா ஊசிக்கிறே?"

"ஒண்ணுல்லண்ணே!" சீட்டில் கிடந்த ஈரப்பலாக்காயை தூக்கி மடியில் வைத்துக் கொண்டான். சிம்பேஞ்சி என்றால் அவனுக்குக் கோபம் வருவதில்லை. "சிம்பேஞ்சிக்கொரங்கு" என்று நீட்டிய சிலரை மட்டுமே கல்லால் அடித்திருக்கிறான். ஈரப்பலாக்காய் கிடந்த இடத்தில் இப்போது செல்வநாயகம் குந்திக்கொண்டான். பதுளையில் புறப்பட்ட பஸ் ஆதர் தர்மசிறி கடைக்கு அருகில் ஐந்து நிமிடங்கள் இளைப்பாறியது.

அ.... பொட்டியெல்லா அடிச்சாச்சா?"

"அ...... அதெல்லாம் முடிஞ்சி...."

செல்வநாயகத்தின் முகத்திலும் முதல் தடவையாக இரக்கம் தெரிந்தது. "சிம்பேஞ்சி இந்தத் தோட்டத்துலதானே பொறந்தா! அப்பாவிப்பய... அவனைப்போயி இந்தியாவுக்குத் தொறத்துறானுவளே?" தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். பதில் கிடைக்கவில்லை.

பஸ் மடக்கும்பர வரும்வரை இருவரும் ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. சிம்பேஞ்சி மரக்கறி சாமான்களையும், ஈரப்பலாக்காயையும் தலையில் தூக்கியபடி இறங்க மூடை வாசலில் தடக்கியது. முன்னும் பின்னும் இழுத்து வெளியே பாய்ந்தான்.

"ஏலேய் சிம்பேஞ்சி! போக மிந்தி ஆதர் மொதலாளியையும் ஒருவாட்டி பாத்திரு என்னா?"

"அ.... சரிங்க..." பஸ் புறப்பட்டது.

செல்வநாயகத்திற்கு எல்லாமே ஆதர் முதலாளிக்கு பிறகுதான். ஆதர் முதலாளியின் ஆணையை ஏற்று யாரோ சில சண்டியர்களை உலக்கையால் அடித்து விரட்டியதாக பெருமைப்படுவான். அப்போது அவனுடைய விசுவாசம் சிரிப்பில் மினுங்கும்.

இறங்கியதும் ரீஸ்டோர் வழியாகவே நடந்தான் செவஞானம். மூட்டையைக் கல்லில் வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டு, ஸ்டோரின் பின்புறம் இருக்கும் றோதைமுனி சாமியை வணங்கினான்.

வருடம் தவறாமல் அங்கு றோதை முனிக்குப் பூசை போடுவார்கள். இன்னும் பக்தியோடு கோழியொன்றைக் காணிக்கையாக வளர்ப்பான். மழைபெய்ய, கொழுந்து விளைய, ஸ்டோரில் நல்லா வேலை நடக்க வேண்டுதல் வைப்பான். பழனிப்பூசாரி கலையாடி மஞ்சள் நீரில் குளிப்பாட்டி நடுங்கியபடியே நிற்கும் கோழிகளை ஒவ்வொன்றாகச் சிறிய கழுமரத்தில் குத்திக்குத்தி இழுத்து வீசுவான். இரத்தம் கால்களால் ஒழுக, அலறியபடியே அவை தூரத்தில் போய் விழ, வருடத்தில் ஒரு தடவையாவது றோதைமுனியின் பெயரால் இவனும் கோழிக் குழம்பு வைப்பான். அதுவும் இனியில்லை.

லயத்துக்குப் போனான். அங்கே தாய் தங்காயி அவனுக்காகவே காத்திருந்தாள். றொட்டியும், சம்பலும் நெளிந்த அலுமினியத்தட்டில் காத்திருந்தன. மூட்டையை இறக்கிவிட்டு றொட்டியைக் கடித்தான். சுவை தெரியவில்லை. எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓரமாக இருந்து அழவேண்டும் போலிருந்தது. "என்னா எழவுக்கு நா பொறந்த இடத்த உட்டுப் போகணும்... மயிரண்டிக..." றொட்டித் தட்டை காலால் உதைத்தான்.

"நீ ஒண்ணுக்குமே பயப்பபடாத ராஜா நம்ம உறவுக்காரவுங்க மிந்தியே அங்கெனத்த போயிட்டாக சட்டுப்பிட்டின்னு ஏதுனாச்சும் செஞ்சி....?"

"என்னியும் உன்னியும் சீமைக்கு அனுப்பிவைப்பாங்களோ? போ ஆத்தா எப்பப்பாரு நீ எடக்கு முடக்காத்தா பேசிகிட்டுக்கெடப்பே.... இங்கே இருக்கிறப்பவே ஏ நாயேன்னுங் கேக்காதவுங்க அங்கினப்போயா துடிக்கப்போறாக..."

இரண்டு நாட்களில் அந்த இடத்து உறவே அறுக்கப்பட்டு அவனும் ஆத்தாளும் தூக்கி வீசப்படப் போறார்கள். அப்படியிருந்தும் குசினியைச் சாணமிட்டு மெழுகி, வாசலில் கோலம் போட்டு, சின்னஞ்சிறிய லயத்தை சுத்தமாகத்தான் வைத்திருந்தாள் தங்காயி. ஆனால் மனம் வெறிச்சென்றுதான் கிடந்தது. சுரத்தின்றி வெளியே நடந்தான்.

தோட்டத்துஸ்கூல் மாடசாமி சிலைக்கு பக்கத்தில் இருந்தது. அவன் பிறந்த காலத்திலிருந்தே ரத்னம் மாஸ்டர்தான் படிப்பித்தார். இழுத்து இழுத்துக் கதைப்பார். அவரிடம் ஒரு துப்பாக்கி இருந்ததாகப் பேசிக் கொண்டார்கள். அவருடைய மனைவி அழகானவளென்றும் அவளைப் பாதுகாக்கவே அதை வைத்திருந்தாரென்றும் கொழுந்துக் காட்டில் பேசிச் சிரிப்பார்கள்.

அப்போதெல்லாம் ஸ்கூல் போகாமலே செவஞானம் எங்காவது போய் ஒழிந்து கொள்வான். ஆனால் பிள்ளைக்கங்காணியோ எங்குபோய் ஒழிந்தாலும் குறி வைத்துவிடுவான். ஒருநாள் மரத்தின் உச்சியில் ஒழிந்திருந்தான். பிள்ளைக் கங்காணி மரத்திலும் ஏறி அவனைப் பிடித்துவந்தான். பாடசாலைக்கு மட்டம்போடும் பிள்ளைகளைப் பிடித்துவந்து மாஸ்டரிடம் கொடுப்பது அவனுக்கு வேலை.

"ஏண்டா செவ்ஞானோ நீ என்னா நினைச்சிக்கிட்டிருக்கே.... அ... அழுவுறியா உங்கேயி மூஞ்சியையும் மொகரக் கட்டயவும்பாரு சிம்பேஞ்சியாட்டமா போடா.... "ஓங்கி ஒரு அடி முதுகில் வைப்பார் மாஸ்டர். குளறியபடியே சாக்கில் விழுவான். இப்படியே போனது அவனுடைய மாணவப் பருவம்.

பின்னர் மீசை முளைக்க பெயர் பதிந்து கொண்டான். புல்லு வெட்டு, உரம் வீசுதல், கவாத்து வெட்டு, துரைசாணியின் மாட்டுத் தொழுவத்தைப் பராமரிப்பதென்று அந்தத் தோட்டமே உலகமாக இருபத்தியாறு வருடங்களை ஓட்டிவிட்டன.

சாமிமலை காய்ந்து கிடந்தது. வேண்டுதல் வைத்தவர்களெல்லாம் ஆளுக்கொரு வேலாகக் குத்தி இருபது முப்பது வேல்களினால் அடர்ந்து கிடந்தது. சாமிமலை முக்கில்தான் டோபி மருதையின் வீடிருந்தது. அவனுடைய மகள் கமலத்தைத்தான் இவன் மனதில் நினைத்திருந்தான். அவளைப்போல தளதளப்பாக தோட்டத்தில் ஒருத்தியும் கிடையாது என்பது இவனுடைய முடிவாக இருந்தது. அவன் ஆசைக்கு

## வசியம் பண்ண தேள்த் தைலம்



கல்கத்தாவில் வாழும் அன்வர் தனது தேகம் முழுவதும் தேள்களை ஊரவிட்டு வளர்த்து வருகிறார். இவரை தேள்கள் எதுவும் செய்வதில்லை என்கிறார். அவரால் வசியப்படுத்தப்பட்ட தேள்கள் தேகமெங்கும் ஊர்ந்து செல்கின்றன. ஒவ்வொரு வருடமும் மாசிமாதம் வந்ததும் இவர் தான் வளர்த்த தேள்களை எல்லாம் கொன்று, நசுக்கி சாறாக்கி தைலமாக உருவாக்குகிறார். பின் வீதியில் நின்று அதை விற்பனை செய்கிறார். குறிப்பாக ஆண்களிடமே அது வியாபாரமாகிறது. இது ஓர் வசிய மருந்து என்பது அன்வரின் கருத்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆத்தா சம்மதிக்கவில்லை. கமலம் மஞ்சள் காமாலை வந்து செத்த பின் முறைப்பெண் ஜெயலச்சுமியை அந்த இடத்தில் வைத்துக் கொண்டான்.

மாலை நேரங்களில் சாமிமலையின் மணியை ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருப்பான். எந்த மூலையில் இருந்தாலும் ஒவ்வொரு கற்களாகத்தாவி மலை உச்சிக்கே வந்துவிடுவாள் ஜெயலச்சுமி.

அவளை நினைத்து எவ்வளவோ கனவுகள். வீட்டில் தோட்டம் போட்டிருந்தான். கரட் பிடுங்கினதும் கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று காத்திருந்தான். மேலைக்காட்டு ராமையா அதற்கும் விட்டபாடில்லை. அவன் எழுதும் கணக்கு அனுமார் வால் போல முடிவேயில்லாது நீண்டு போகும். எப்படிப் பாடுபட்டாலும் கையில் ஒற்றைச்சல்லி மிஞ்சாது. மருந்து, உரம், விதை, அரிசி, தேங்காயென்று வாங்கிய கடனைக் கூட்டிக்கொண்டேபோவான் முடிவில் ஒவ்வொரு அறுவடை முடிவிலும் இவனே கடனாளியாக நிற்பது வழமை.

நாலு வருடங்களாகக் காத்திருந்த ஜெயலச்சுமி நேற்றுத்தான் கண்ணீரோடு விடைபெற்றாள். அவளுக்கு இலங்கையில் சிற்றிசென் என்று சொன்னார்கள். இந்தியாவுக்குப் போகவேண்டும். நடப்பதெல்லாம் உயிரைத் தறித்து துண்டுபோடுவதைப் போலிருந்தது. அவர்கள் இருவரும் அடுத்த ஜென்மத்திலாவது ஒன்றுசேர வேண்டுமென வேண்டி சாமிமலையில் வைத்த பூக்களைப் பார்த்தான். வாடிப்போயிருந்தன. ஜெயலச்சுமியைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. நீண்ட நேரமாக மணியை அடித்துக் கொண்டிருந்தான். ஒரு வேலியின்மேல் இருந்தபடியே ஓணான் ஒன்று அதைப் பிடுங்குவதைப் போல விருட்விருட் என்று தலையை ஆட்டியது.

சாமிமலைச் சரிவிலிருந்து நீர் கோவெனப் பாய்வது கேட்டது. அப்படியே பள்ளத்தில் குதித்து இறந்துவிடலாமா என்றும் யோசித்தான்.“ எலே செவ்ஞானம் எந்திரி!” ஆத்தாள் வந்து கத்திய போதுதான் நன்றாக உறங்கிவிட்டது தெரிந்தது. “ஏ சும்மானாச்சும் கூவுற?” என்றபடியே இவன் இறங்க, மறுபுறம் இரவுக் காற்று குளிரைச் சுமந்தபடியே மலையில் கஷ்டப்பட்டு ஏறத் தொடங்கிற்று.

வீடுவந்து சேர்ந்தபோது அவளைத்தேடி தங்கமலைத்தோட்டத்து மோசெசு வந்திருந்தான். அவனைப் பணியகாட்டு கடைக்கு அழைத்துப்போனான் கைக்காசு கொடுத்தே இருவரும் வாயை நனைத்துக் கொண்டு வந்தார்கள். மெல்லிய மயக்கம். இவன் ஜெயலச்சுமியைப் பற்றித்தான் புலம்பிக்கொண்டிருந்தான். சாப்பிடும் போது கொளம்பு நல்லாரிக்கி என்றபடி விரல்களை நக்கினான் மோசெசு. பிறகு தபால்கார பங்காருவர இன்னொரு தடவை பணியகாடு போய்வந்ததாக நினைவு...

தோட்டத்திலிருக்கும் வீடுகளெல்லாம் ஒன்றுவிடாமல் பயணம் சொல்லி வந்தான். பகை உறவு எதுவுமில்லாமல் எல்லோர் குரலும் பயங்கலந்து கிணற்றிற்குள் இருந்து வருவதைப்போலிருந்தது. அப்போதுதான் ஆதர் கடை செல்வநாயகத்தையும் கண்டான். அவனுக்கும் இந்தியா போக கடிதம் வந்திருந்ததை அறிந்தான். இனி ஆதர் முதலாளி அவனுடைய இடத்திற்கு இன்னொரு செல்வநாயகத்தைப் போடுவார் தொடர்ந்தும் ரீக்கடை நடக்கும்.

பயணம் புறப்படும் போது நிலமை மோசமாயிருந்தது. “ஐயோ என்னை உட்டுறுங்க நாமாட்டே.... என்னாலே பொறந்த இடத்தை உட்டு போக ஏலா! ஆத்தா! காப்பாத்துங்க ஆத்தா! என்னைக் காப்பாத்துங்க!” செவஞானம் புகையிரத நிலயத்தில் விழுந்து விழுந்து கூச்சலிட்டான். வந்திருந்தவர்களெல்லாம் குளறி அழுதனர். ஜெயலச்சுமி தலையை கைகளால் ஓங்கி ஓங்கி மோதினாள். உயிரோடு சாவோர் காட்சியை பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கிழட்டுப் புகையிரதம் தன் பாட்டுக்கு மூச்சை முட்டி புகையை இழுத்தது.

செல்வநாயகமும் வேறுசிலரும் அவனைத் தூக்கி புகையிரதத்தினுள் போட்டார்கள். “செவ்ஞானம் அழுவாதடா! அப்ப பொறப்படுமுங்க...” தங்காயிதான் முதவில் ஏறினாள். “நகிண்ட நகிண்ட!” யாரோ சில பயணிகள் அவர்களை இடித்து உள்ளே தள்ளுகிறார்கள்.


உடரட்டமெனிக்கே, ஊ...” என்றபடி உருள்கிறது. செவ்ஞானத்தின் அழுகுரலையும் அவன் நாடு கடத்தப்படும் அவலத்தையும் பார்த்து, முன்னரே கோணர் சீட்டில் இடம்பிடித்திருந்த சிலர் சிரித்துக் கேலி பண்ணியதை யாரும் பார்க்கவில்லை.

இது நடந்து இருபத்தைந்து

## அத்தி பூத்தாற் போல்

**நடக்காத ஒன்றைச் சொல்வதற்கு ‘அத்தி பூத்தாற் போல’ என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்கள். அத்திமரத்தில் பூக்கள் பூக்கின்றன. ஆனால் அந்தப் பூக்களை நாம் காணமுடியாது. பூக்கும் பூக்களை நாம் காணமுடிவது கிடையாது. அத்திப்பழம் பலவகையான மருத்துவப் பயன்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் பல இடங்களிலும் அத்தி மரம் வளர்கிறது.**

**மறுபடியும் கற்காலம்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வருடங்களாகிவிட்டது. செவஞானம் என்னவானான் என்பது இதுவரை தெரியாத செய்தியாகிய நினைவுகளுடன் அந்த ஐரோப்பிய நாட்டின் அகதிமுகாமிற்குள் படுத்திருந்தான் குணம்.

தாய்நாட்டில் நடைபெறும் அவலங்களைப் புகைப்படங்களாக்கி எங்கும் தொங்கவிட்டிருந்தார்கள். அகதியாகக்கூட ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்ட நிலை. தற்போது திருப்பியனுப்ப வேண்டாமெனக்கேட்டு அவனும் அவனோடு வேறுபலரும் உண்ணாவிரதமிருந்தனர்.

"எங்களைத் திருப்பியனுப்ப எந்த நியாயமும் இல்லையே? மனிதாபிமானத்திற்காவது நீங்கள் செவிசாய்க்க வேண்டும். ஏன் உங்கள் முடிவை மாற்றக்கூடாது?" என்று கேட்டுப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

"ஐ, நாவின் அகதிமுகாம் இப்போது உங்கள் நாடான இலங்கையிலும் பல இடங்களில் இருக்கிறது. நீங்கள் அங்குபோய்ப் பாதுகாப்பாக வாழலாம்" என்று உரத்துக் கூறினான். அந்த வெள்ளைக்கார அதிகாரி. நாட்டின் தற்போதைய நிலைமைகளை விளக்கி புதிதாக வந்திருக்கும் அறிக்கையை மேசையில் தூக்கிப் போட்டான்.

நாட்டில் ஒருவாரகாலம் நின்று சேகரிக்கப்பட்ட பயணக்குறிப்புகள் போன்ற தகவல்கள் அவை. தான் அங்கு பிறந்து வளர்ந்து, வாழ்ந்து தகவல்களைப் பெற்றவன் என்றபடியே அதை மறுபடியும் மேசையில் போட்டான் குணம். அப்பொழுதுதான் ஒரு பொலீஸ் வண்டி வந்து நிற்பது கண்ணாடி ஜன்னலூடாகத் தெரிந்தது. அவர்களில் ஒருவனின் கையில் பெயர்ப் பட்டியலும் நாடுகடத்தும் ஆணையும் மங்கலாகத் தெரிந்தன. அச்சமடைந்த சிலர் எழுந்து ஓடுகிறார்கள். அதைப் பார்த்ததும் பெலீசார் விரட்ட ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் மேலும் வேகமாக ஓடுகிறார்கள். திடீரென நான்கு புறமும் பலமான அபாய அலாரங்கள். கணப்பொழுதில் முகாமைச் சுற்றி எண்ணற்ற பொலீஸ் வண்டிகள் அணிவகுத்து நின்றன.

சிறக்கை மடக்கிப் பிடித்த கோழிகள் போல ஓடியவர்களைப் பிடித்து இழுத்து வருகிறார்கள். "ஐயோ ஐயோ என்னைத் திருப்பியனுப்பாதையுங்கோ கெல்ப்.... கெல்ப்....!" யாரோ ஒரு இளைஞனின் குரல் அவலமாக ஒலித்தது. ஓடிக்களைத்த பொலிஸ்காரர்கள் கோபத்தோடு. வண்டிக்குள் சிலரை நெட்டித் தள்ளுகிறார்கள்.

உயிரோடு நடைபெறும் மரணங்களுக்காக அழுகுரல்கள், அகப்பட்டவர்கள் செவ்ஞானம் ஜெயலச் சுமிகளாகத் துடிதுடித்துப் புரள, நாடுகடத்தும் வாகனம் இங்கும் இரக்கமின்றியே நகர்கிறது.

பசி, களை, யாவற்றுக்கும் மேலாக திருப்பியனுப்பப்பட்டால் என்ற பீதியே மேலோங்கி நின்றது. எல்லோர் முகங்களிலும் கவலை ஆழமாகக் குழி வெட்டி, கருப்புக் கருப்பாகப் படிந்து கிடந்தது. பொலிஸ் வண்டிகளின் காது வெடிக்கும் சத்தங்கள் இப்போதைக்கு மட்டும் தற்காலிகமாக ஓய்ந்து கிடந்தன. மறுபடியும் எப்போது அவர்களின் அலாரம் கேட்குமோ? இனி அடுத்ததாக யாரைத் தூக்கிச்செல்ல வரப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு முன்னதாகவே கட்டப்பட்ட அந்தப் பழைய கட்டிடமும் பயத்தில் நிசப்பதமாகக் கிடந்தது.

தயங்கித்தயங்கி வெளியேவந்து பார்த்தான் குணம். யாரையுமே காணமுடியவில்லை. தூரத்தே சிவந்து கிடந்த அடிவானக் கோட்டின் வழியாக அழுகுரலொன்று எழுவது போன்ற பிரமை. அது செவ்ஞானத்தின் குரலா? அல்லது தூக்கிச் செல்லப்பட்ட இளைஞனின் குரலா? என்பதைப் பிரித்தறிய முடியாதிருந்தது.

கி. செ. துரை

## பாரவண்டிகளில் மறைத்து வருவது இனி இலகுவான காரியமல்ல

வண்டி நிறையப் பொருட்களை அடைந்து நடுவே கடத்தல் பொருட்களை மறைத்தபடி வெளியேறும் சரக்கு லாறிகள் சுங்கத் திணைக்களத்தின் கண்களில்



மண்ணைத்தூவுவது இதுவரை இலகுவான காரியமாக இருந்து வந்தது. தற்போது இதைக் கண்டுபிடிக்க புதிய கருவிகள் வந்துள்ளன. ஜேர்மனியில் ஹம்பேர்க் காலனியில் பொருத்தப்பட்டுள்ள இக்கருவி பாரவண்டிகளின் மீது கிடையாகவும் குத்தாகவும் ஊடுகதிர்களை வீசிச் செல்லும். ஒரு சிறிய கைத்துப்பாக்கியை யாராவது எங்காவது ஓர் மூலையில் ஒளித்து வைத்தாலே போதும் நாலேநாலு நிமிடங்களில் தேடிப்பிடித்துவிடும். இச்சோதனைக் கருவிகளின் வருகையால் முன்னர் ஆறு மணிநேரத்தில் செய்ய வேண்டியிருந்த சோதனை சேவைகளை அரை மணி நேரத்தில் முடித்துவிடுவதாகக் கூறுகிறார்கள் சுங்க அதிகாரிகள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலையும் மக்களும்




## குரலிசையின் சிறப்பு அம்சங்கள்

# குரலிசையையும் கருவி இசையையும் ஒப்பு நோக்கி அறிதல்

## பாகம் - 2

1– குரல் இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அரும்சாதனம். பாடக்கற்றுக்கொள்வது ஒரு கலையாகும். "குரல் இல்லாதவனுக்கு விரல்" என்பது நினைவில் கொள்ளவேண்டிய ஒரு முதுமொழி.

2– பிறர் பாடுவதுபோல் அப்படியே பாட முயற்சிப்பதன் பயனாகப் பாடும் திறனைச் சிலர் பெறக்கூடும். ஆனால் கருவி இசையில் இது இயலாது. பிற ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்வது அவசியம்.

3– பாடும்போது தொடர்ந்த இசையொலி ஏற்படுகிறது. இசைக்கருவிகளை வாசிக்கும் போது இத்தகைய தொடர்ச்சியான இசையொலியைப் பெற இயலாது.

4– குரலிசையால் நாம் பெறும் மிகப் பெரும் நன்மை என்னவென்றால் பாடல்களின் வார்த்தைகளை நாம் கேட்டு மகிழ முடியும்; கருவி இசை வழியாக நாம் ஒருக்காலும் இந்த நன்மையைப் பெற இயலாது. திரு இசை, நாட்டிய இசை, இசைநாடக இசை, நாடோடி இசை போன்றவற்றில் காணப்படும் பலவித இசைவடிவங்கள் வார்த்தைகளை இசையோடு கேட்டுப் பயனடைய குரலிசை துணைபுரிகிறது.

5– குரலிசை வழியாகத்தான் சங்கதிகள், நிரவல்கள் பாடுவதால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்கமுடியும்.

6– ஒரே இராகத்திலுள்ள வெவ்வேறு மெட்டுக்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்குச் சாகித்தியம் தெரிந்திருப்பது அவசியம்.

7– குரலிசையாளர் பாடும்போது தானே தாளத்தையும் போட்டுக்கொள்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கருவி இசையில் அப்படியில்லை.

8– கருவி இசையாளர்களும் குரலிசையைக் கற்று, சாகித்தயத்தைப் மனதில் கொண்டு வாசிப்பார்களானால், அவர்களுடைய வாசிப்பு இன்னும் சிறப்புடையதாக இருக்கும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கருவி இசையின் சிறப்பு அம்சங்கள்

*1–* கருவி இசை வழியாகவும் நாம் கலையின்பம் பெறமுடியும் என்பது உண்மை. வெவ்வேறு கருவிகளின் வெவ்வேறு இசை கேட்பதற்கு தெவிட்டா விருந்தாக இருக்கும்.



*2–* தெய்வங்கள் இசைக்கருவிகளோடு காட்சியளிப்பதிலிருந்து கருவி இசையின் மேன்மையை நாம் உணரமுடிகிறது. எடுத்துக்காட்டுகளாக சரஸ்வதி வீணையுடனும், நந்திகேஸ்வரர் மிருதங்கத்துடனும், கிருஸ்ணன் குழலுடனும் படங்களில் காட்சியளிப்பதை நாம் அறிவோம்.

*3–* இசையொலியின் பலவித நுனுக்கங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும், இராகங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு சுருதிகள், மற்றும் கமகங்களைப் பற்றி அறியவும் கருவி இன்று மிகவும் துணை செய்கிறது.



*4–* சமுதாயத்தின் பல்வேறு தேவைகளுக்கு இசைக்கருவிகள் பயன்படுகின்றன. செய்திகளைத் தெரிவிப்பதற்கு நம் முன்னோர் மத்தளங்களை உபயோகித்தனர்.

*5–* குரலிசை அரங்குகளுக்கும், நாட்டிய அரங்குகளுக்கும், இசை நாடகங்களுக்கும், நாட்டிய நாடகங்களுக்கும் கருவி இசையின் உதவி மிகவும் அவசியம்.



*6–* குழுவாக வாசிக்கப்படும் பல கருவிகளின் இசை கேட்பதற்கு நமக்கு மிகவும் இன்பமாக உள்ளதை நாம் அறிவோம்.

*7–* குரலிசையாளர் ஏதாவதொரு கருவி வாசிப்பதில் ஓரளவிலும் திறமை பெற்றிருந்தால் நல்ல பயன் தரும்.

*8–* நோக்கங்களைத் தீர்ப்பதற்கு கருவி இசை பயன்படுத்தப்படுகிறது. செடிகள் நன்கு வளர்வதற்கும், பசுக்கள் நன்கு பால் கொடுப்பதற்கும் இனிமையான கருவி இசை பயன்படுத்தப்படுகிறது என்று அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளதை நாம் அறிவோம்.

மனிதனின் குரலே ஓர் இசைக் கருவி என்று கூறலாம். காற்று இசைக்கருவி வாய்–ஒலி பெருக்கும் சாதனம் என்பார்கள்.

**பைரவி**

## அந்த மகிழ்ச்சியான விதவை

மார்கழி வந்தால் தமிழகத்தில் சங்கீத சீசன். இதுபோல இப்போது ஐரோப்பாவில் நாடகசீசன். 97/ 98 நாடகசீசனில் பெருவெற்றி பெற்ற அந்த மகிழ்ச்சியான விதவையென்ற நாடகத்தில் ஒரு காட்சி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டாக்டர் பதில்கள்

**கேள்வி:**

என் வயது 16. என் முகத்தில் பருக்கள் அதிகமாக வருகின்றன. எத்தனையோ மருந்துகளை உபயோகப்படுத்தி விட்டேன். மேலும் கூடுகின்றதே தவிர, குறைந்தபாடில்லை. இதற்கு ஒரு நல்ல மருந்தைச் சொல்லுங்களேன்.

**பதில்:**

முகத்தில் எண்ணெய் பசை சேர விடாமல் அடிக்கடி அலம்ப வேண்டும். கடலை மா அல்லது பயத்தம் பருப்பு மாவினை உபயோகிக்கவும். அடிக்கடி சோப்பை மாற்ற வேண்டாம். அத்துடன் முகத்திற்கு ஒரே கிரீமைப் போடவும். மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.

**கேள்வி:**

என் கால் பாதத்தின் இடது பக்கம் உள்ள கணு கறுப்பாகவும், தோல் வறவறவென்றும் இருக்கிறது. இதனால் எனக்கு மிடி போன்ற உடைகள் போட விகாரமாக உள்ளது. என்ன போட்டால் அங்குள்ள தோல் நிறம் மாறி சாதாரணமாக ஆகும்? நான் நல்ல சிவப்பு நிறமாகையால், இது எனக்குப் பெரும் வேதனையை அளிக்கிறது. எனக்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்.

**பதில்:**

வைட்டமின் A & B கலந்த மாத்திரைகளை உட்கொள்ளலாம். Evion 400 என்னும் மருந்துடன் Olive Oil கலந்து கணுவின் மீது தடவலாம். வைட்டமின் A & B உள்ள Oil வாங்கி அதையும் காலின் மேல் தோல் வறவறவென்றிருக்கும் இடமெல்லாம் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தடவை தடவி வந்தால் உங்கள் குறை மறையும். உங்கள் சிவப்பு உடம்புக்கு ஏற்றபடி மாறும்.

**கேள்வி:**

என் தலைமுடி நீளமாக இருந்தது. இப்போது நிறைய கொட்டுகிறது. ஓரிரு நரையும் தோன்றுகிறது. இதைத் தடுக்க ஏதாவது வழி சொல்லுங்கள் டாக்கடர், என் வயது 19.

**பதில்:**

தலையில் பொடுகு இருக்கிறதா என்று பார்க்கவும். தோல் நோய் இருந்தாலும் முடி கொட்டும்; நரைக்கவும் செய்யும். விரைவில் தோல் நோய் நிபுணரை அணுகுங்கள்.

## அறிவும் உடலும்

உடம்பிற்கும் அறிவிற்கும் சம்பந்தமில்லை என்பது நம்மில் பலருடைய எண்ணம். தண்டச்சோறு, தடிமாடு போன்ற சொற்களால் இதை இன்னொருவிதமாக . உரத்துக் கூறிக்கொள்கிறோம். ஆனால் ஆணழகன் விக்டர் றிச்சார்ட் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. தேகம் அலட்சியப்படுத்தப்பட முடியாதது. அதைக் கட்டுமஸ்தாக வைத்திருக்க வேண்டுமானால் முதல் முக்கியமானது மூளையே என்கிறார். கணணிபோல மிகக் கூர்மையான மூளையால்தான் உடலை அங்குலம் அங்குலமாகச் சீர்தூக்கிப் பராமரிக்க முடியும். தனது அறிவே தன் நோயற்ற உடல் என்கிறார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொது அறிவுப் போட்டி இல: 1

பாலம் சஞ்சிகை நிறுவனத்தினரால் இந்த இதழில் இருந்து பொது அறிவுப் போட்டி ஆரம்பமாகின்றது. ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். தொடர்ந்து நடைபெறும் 10 அறிவுப்போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வாசகர்களுக்கு பாலம் சஞ்சிகையினரால் சிறந்த பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெறும் பட்சத்தில் குலுக்கல் முறையில் வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகளை கீழே உள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவும்.

## கேள்விகள்:

1– அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட 44 வருடங்கள் தமிழ் இராட்சியத்தை அரசாண்ட இந்த மன்னன் சிங்கள மன்னனான துட்டைகைமுனுவுடனான சண்டையின் போது கொல்லப்பட்டான். இந்தத் தமிழ் மன்னனின் பெயர் என்ன?

2– பன்னிரண்டு வருடங்களிற்கு ஒருமுறை மலரும் பூ எது?

3– சூரியன் உதிக்கும் நாடு என்று எது அழைக்கப்படுகிறது?

4– கியூபா நாட்டின் புரட்சியில் முக்கிய பங்குவகித்து கியூபா சுதந்திரம் பெற்றபின், பொலிவிய நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி பொலிவியாவில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட ஏர்னஸ்டோ சேகுவேரா எந்த நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர்?

5– 100 மைல் எத்தனை கிலோ மீற்றர்?

---

## பொது அறிவுப் போட்டி இல:1

பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்ற திகதி:– ..........................

விடைகள்:

1 ..............................................
2 ..............................................
3 ..............................................
4 ..............................................
5 ..............................................

பெயர்:– ..........................................

முகவரி:– ..........................................
..........................................
..........................................

தொலைபேசி இல.:– ..........................

அனுப்பவேண்டிய முகவரி:–

PAALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST.TV
7430 IKAST
DENMARK



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வாசன் அச்சகம்

45C, Crusoe Road, Mitcham, Surrey CR4.

**Tel: 0181 646 2885**




**Wedding Cards, Letter Heads, Business cards, Leaflets, Receipt pads, Restaurants Menus, Invoice, etc..........**

**நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் ......**

உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில் தரமாகவும், விரைவாகவும், மலிவாகவும் குறித்த நேரத்தில் பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்.

www.tamilarangam.net



# 40 ஆண்டுகள் விண்வெளியில்

**கடந்த 40 ஆண்டுகளாக விண்வெளியில் நடைபெற்ற மிக முக்கியமான சரித்திரங்கள்**

### 1957

ரஸ்சியாவின் Sputnik என்னும் விண்கலம் அனுப்பப்படுகின்றது. விண்வெளிக்கு முதன் முதல் செல்லும் நாய் Layka Sputnik 2ல் தனது பயணத்தை மேற்கொள்கிறது.



### 1958

அமெரிக்காவின் முதல் செய்மதி (Satellit) Explorer Van Alles Balterne 1 என அழைக்கும் பூமியின் ஒளி மண்டலத்தை கண்டு பிடிக்கின்றது.

### 1959

ரஸ்சியா வின் Luna 1 எனும் செய்மதி (Satellit) முதலாவது செய்மதியாக சூரியனைச் சுற்றுப் பாதையைச் சென்றடைகின்றது.



சந்திரனைத் தொடும் முதலாவது செய்மதி Luna 2 எனும் செய்மதி. Luna 3 எனும் செய்மதி சந்திரனின் பின் பகுதியை புகைப்படம் எடுக்கின்றது.

### 1960

அமெரிக்கா Tiros 1 எனும் காலநிலை செய்மதியையும் Transit 1 B எனும் கடல் பயணத்திற்கு உதவும் செய்மதியையும் அனுப்புகின்றது. Discoverer 13 எனும் முதல் செய்மதி பூமிக்கு திரும்புகின்றது.

### 1961

12–ம் திகதி சித்திரைமாதம் Jurij Gagarin எனும் மனிதன் முதல்முறையாக விண்வெளிக்கு பயணம் செய்கின்றார். 5–ம் வைகாசி மாதம் அமெரிக்காவைச் சேர்ந்த AlanShepard தனது விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ளுகின்றார்.



ஜனாதிபதி Kennedy "Apollo" திட்டத்தை ஆரம்பிக்கின்றார்.

### 1962

அமெரிக்காவைச் சேர்ந்த John Glenn முதன் முறையாக பூமியைச் சுற்றும் பாதையை அடைகிறார். அமெரிக்காவில் இருந்து



அனுப்பப்படும் Mariner2 முதல் முறையாக வெற்றிகரமாக வெள்ளிக்கிரகத்தை சென்றடைகின்றது.

Telstar எனும் அமெரிக்காவைச் சேர்ந்த உலகத்தின் முதல் தொலை தொடர் செய்மதி அனுப்பப்படுகின்றது.

**நிலவன்**

### 1963

முதல் பெண் ஆன Valentina Teresjkova விண்வெளிக்கு பயணம் செல்கின்றார்.



### 1964

ரஸ்சியாவைச் சேர்ந்த 3 மனிதர்களைக் கொண்ட விண்வெளிக் கப்பல் Voskhod 1 அனுப்பப்படுகிறது.

### 1965

ரஸ்சியாவைச் சேர்ந்த Leonov முதல் தடவையாக விண்வெளியில் நடக்கின்றார். அமெரிக்காவின் Mariner 4 முதல் முறையாக வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தைச் (Mars) சென்றடைகின்றது,

### 1966

ரஸ்சியாவின் Luna 9 சந்திரனில் இறங்குகின்றது. Luna 10 எனும் செய்மதி முதல்முறையாக சந்திரனைச் சுற்றும் பாதையைச் சென்றடைகின்றது.

### 1967

பூமியில் சோதித்துப் பார்க்கும் பொழுது Appolo 1ல் இருந்த 3விண்வெளி வீரர்கள் இறக்கின்றனர். ரஸ்சியாவைச் சேர்ந்த Komarov புதிய விண்வெளிக் கப்பலான Sojuz—சை பறந்து பார்த்துவிட்டு திரும்புகையில் இறக்கின்றார்.

### 1968



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





Jurij Gagarin ஒரு விமான விபத்தில் இறக்கின்றார். Apollo 8 Borman Lovell Anders என்னும் விண்வெளி வீரர்களைக் கொண்டு விண்வெளிக் கப்பல் முதன் முறையாக சந்திரனைச் சுற்றும் பாதையைச் சென்றடைகின்றது. அவர்கள் நத்தார் இரவன்று சந்திரனுக்கு மேல் உலகம் எழுவதைப்



பார்க்கின்றனர்.

## 1969

Apollo 11 முதன்முறையாக சந்திரனில் 21–ம் திகதி ஆடி மாதம் இறங்குகின்றது. Ornen என்னும் இறங்கிய பகுதியான விண்வெளிக் கப்பலில் Amstrong தம் Aldrin னும் இருக்கையில் Collins சந்திரனின் சுற்றுப் பாதையில் நிற்கின்றார். அமெரிக்கா Nerva என்னும் அணுசக்தி வாய்ந்த உந்து கலம் ஒன்றை உலகதிலே சோதித்துப் பார்க்கின்றது. ஆனால் இரண்டு



வருடங்களுக்குப் பின் அந்த திட்டத்தை கைவிடுகின்றது.

## 1970

ஜப்பானும் சீனாவும் அவர்களுடைய செய்மதியை முதல் தடவையாக அனுப்புகின்றனர். Apollo 13 சந்திரனுக்கு பறக்கும் வழியில் வெடிக்கின்றது. விண்வெளி வீரர்கள் சந்திரனை ஒரு முறை சுற்றிய பின் காப்பாற்றப்படுகின்றனர்.



luna 16 சந்திரனில் பரிசோதித்த பொருட்களையும் பரிசோதனைப் பொருட்களையும் ரஸ்சியாவிற்கு கொண்டு வருகின்றது. luna 17 முதலாவது காரை சந்திரனில் இறக்குகின்றது.

## 1971

அமெரிக்காவின் Mariner 9 முதல் தடவையாக செவ்வாய் கிரகத்தைச் சுற்றும் பாதையைச் சென்றடைகின்றது. ரஸ்சியாவைச் சேர்நத 3 விண்வெளி வீரர்கள் 3 வாரம் Saljut1 எனும் விண் நிலையத்தில் தங்கிவிட்டு திரும்பும் வழியில் மரணிக்கின்றனர்.

## 1972

அமெரிக்காவின் Pioneer 10 வியாழன் கிரகத்திற்கு அனுப்பப்படுகின்றது. கடைசியாக சந்திரனுக்கு பயணம் சென்றது Apollo 17.

## 1973

அமெரிக்கா Skylas என்னும் விண்கலத்தை அனுப்புகின்றது. Mariner 10 வெள்ளிக்கிரகத்தையும், புதன் கிரகத்தையும் நோக்கி தனது பயணத்தைத் தொடங்குகின்றது.

## 1975

அமெரிக்காவின் விண்வெளி வீரர்களும் ரஸ்சியாவின் விண்வெளி வீரர்களும் விண்வெளியில் சந்திக்கின்றனர். ரஸ்சியாவின் Venera 9 வெள்ளிக் கிரகத்தின் முதலாவது தொலைக்காட்சிப் புகைப்படங்களை அனுப்புகின்றது. அமெரிக்காவின் Viking 1–ம், 2–ம் செவ்வாய் கிரகத்தை நோக்கிப் புறப்படுகின்றது.



## 1976

Viking 1–ம், 2–ம் செவ்வாய்க் கிரகத்தின் வடக்கு கோளத்தைச் (Mars nor digc halkugle) சென்றடைகின்றது.

## 1977



அமெரிக்காவின் Voyager 1–ம், 2–ம், வியாழன் கிரகத்தின் பக்கமாக சென்று முதல் புகைப்படங்களை எடுக்கின்றது. அமெரிக்காவின் Pioneer 11 சனிக்கிரகத்தைத் தாண்டி பறந்து செல்கின்றது. முதல் தடவையாக ஐரோப்பாவின் உந்துகலமான Ariane, Fransk Guyana வில் இருக்கும் Kourou என்னும் இடத்தில் இருந்து அனுப்பப்படுகின்றது.

## 1980

அமெரிக்காவின் Joyager 1 சனிக்கிரகத்தைச் சென்றடைகின்றது.

## 1981

Columbia எனப்படும் விண்வெளிக் கப்பல் அனுப்பப்படுகின்றது.



## 1983



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்காவின் ஜனாதிபதியான Reagan Stjernekrigs Projekt எனப்படும் நட்சத்திர திட்டத்தை ஆரம்பிக்கின்றார்.

**1985**

ஐரோப்பாவும், ஜப்பானும், ரஸ்சியாவும் Halleys வால் நட்சத்திரத்திற்கு விண்கலத்தை அனுப்புகின்றனர்.

**1986**

Voyager 2 Uranus கிரகத்தைச் சென்றடைகின்றது. Challenger எனப்படும் விண்வெளிக் கப்பல் வெடித்துச் சிதறுகின்றது. அதில் 7 விண்வெளி வீரர்கள் இறக்கின்றனர். ரஸ்சியாவின் விண்கலமான Mir அனுப்பப்படுகின்றது.



Vega 1–ம்,2–ம் ஐரோப்பாவின் Giotto–வும் ஜப்பானின் Suisei யும் Sagigeke யும் Hallys வால் நட்சத்திரத்தைத் தாண்டி பறந்து செல்கின்றது.

**1988**

ரஸ்சியாவின் ஒரேயொரு விண்வெளிக் கப்பலான Buran முதல் முறையாக அனுப்பப்படுகின்றது. ரஸ்சியாவின் பிளவினால் அந்த திட்டம் கைவிடப்படுகின்றது.

**1989**

அமெரிக்காவின் Voyager 2, Neptun கிரகத்தைச் சென்றடைகின்றது. அமெரிக்காவின் Magellan வெள்ளிக் கிரகத்திற்கு அனுப்பப்படுகின்றது.

**1990**

Hubblermteleskop எனப்படும் விண் டெலஸ்கோப் பூமியின் சுற்றுப் பாதையைச் சென்றடைகின்றது. அமெரிக்காவின் Galileo வியாழன் கிரகத்திற்கு (Jupiter)



அனுப்பப்படுகின்றது.

**1992**

Galileo Asteroiden Gaspra வைத் தாண்டிப் பறக்கின்றது.

**1994**

Galileo Asteroiden Ida வைத் தாண்டிப் பறக்கின்றது. அதே நேரம் அது சின்னச் சந்திரனான Daktyl லைக் கண்டு பிடிக்கின்றது.

**1995**

ரஸ்சியாவைச் சேர்ந்த வைத்தியர் Polyakov 14 மாதங்கள் Mir வில் பறந்து விட்டு திரும்புகின்றார். முதல் முறையாக Mir வும் இன்னும் ஓர் அமெரிக்காவின் விண்கப்பலும் இணைகின்றது. விண்கலமான Mir வில் முதல் அமெரிக்கராக Norman Thagard



பயணம் செய்கிறார். Galileo வியாழன் கிரகத்தைச் சென்றடைகின்றது. அத்தோடு கிரகத்தைச் சுற்றும் பாதையையும் சென்றடைகின்றது. விண்கலத்தின் தரையிறங்கும் பகுதி வியாழன் கிரகத்தின் Atmosjore வை நோக்கி அனுப்பப்படுகின்றது.

**1996**

Hubble Rumteleskop எனப்படும் விண்டெலஸ்கோப் 100.000 வது படத்தை எடுக்கின்றது. Galileo வியாழன் கிரகத்தை நன்றாகப் பரிசோதிக்கின்றது.

**1997**

Mars Pathjinder எனப்படும் விண்கலம் 4–ம் திகதி ஆடி மாதம் செவ்வாய்க் கிரகத்தில் இறங்குகின்றது. அது ஒரு விதமான விண்



வெளிக்காரரையும் கிரகத்தில் இறக்குகின்றது. ஐப்பசி மாதம் Cassini எனப்படும் விண்கலம் வியாழன் கிரகத்தை நோக்கிப் புறப்படுகின்றது

## உலகின் மிகப் பெரிய மிதிவண்டி 24 இருக்கைகளுடன் கூடியது






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




HOLIDAY ON ICE

# சறுக்கும் பனிக்கட்டியில் சாகசம்




'கொலிடே ஒன் ஐஸ்' உலகின் 23 நாடுகளின் பிரபலமான நடனக் கலைஞர்களால் வடிவமைக்கப்பட்ட பிரமாண்டமான கலைப்படைப்பு. மொத்தம் 25 ஆயிரம் நுழைவுச் சீட்டுக்கள். அதில் இருபத்தினாலாயிரத்திற்கும்மேல் தீர்ந்து விட்ட



## நம்பமுடியவில்லை ஆனால் நடப்பது நிஜம்!

நிலையில் பாலம் சஞ்சிகையின் சார்பில் இரண்டு இருக்கைகளைப் பெற்றுக் கொண்டோம். திகைப்பு பிரமாண்டம், கலைத்துவம், கொள்ளைகொள்ளும் பாடல்கள், கண்களைப் பறிக்கும் ஆயிரக்கணக்கான மின் விளக்குகளுக்குமிடையில் எதைப்பார்ப்பது, எதைக் குறிப்பதென தெரியாத நிலையிலிருக்க நம்பமுடியாத கலைப்படைப் பொன்று நம் கண்முன் வெடித்து மலர்ந்தது.

வழுக்கியோடக் கூடியவாறு ஐசினால் உருவாக்கப்பட்ட இராட்சத அரங்கில் சர்க்கஸ் வித்தை காட்டுவதுபோல சீறிப்பாய்ந்து செல்லும் நூற்றுக்கணக்கான நடனத் தாரகைளின் மயிர்க்கூச்செறியும் நடனங்களும் பார்வையாளர்களை இருக்கையின் விளிம்பிற்கே இழுத்து வந்துவிடுகிறது. பனிக்கட்டி நடனத்தின் ஐம்பதாண்டு கால வளர்ச்சியின் உச்சங்களையெல்லாம் பூப்போல கொய்து, மூசாட், பீத்தோவான் போன்றவர்களின் அபார இசை வடிவங்களை கணணிக்குள் புகுத்தி புதிய அதிர்வுகளுடன் மீண்டும் உருவாக்கி, நடனத்துடன் கலக்க விடுகிறார்கள். 'ரிதம்' எப்படியி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## HOLIDAY ON ICE

ருக்கிறது என்பதை உன்னித்தறிந்து அதற்கேற்ப பேரொளி எறிகின்றன கணணிகள். இவற்றோடு இதுவரை உலகில் எந்தவொரு நாட்டிய நாடகத்திற்கும் தயாரிக்கப்பட்டிராத பல கோடி பெறுமதியான மின்னித் தெறிக்கும் ஆடைகள், அரங்க அமைப்புக்களுடன் மனதைத் தொடும் கதையும் பின்னிப் பிணைந்து, பார்வையாளர்களின் இதயங்களை மயிர்க்கூச்செறிய வைத்துவிடுகிறது. உலகறிந்த நடன இயக்குனர்கள், மின்னொளிப் பொறியியலாளர்களென ஒரு கலைப்பட்டாளமே இணைந்து டென்மார்க்கின் சர்வதேச நடன அரங்கை அதிரப்பண்ணுகிறார்கள்.

ஆரம்பிக்கும் போதே புகை மூடிய அரங்கில் நட்சத்திர மண்டலம் கண்முன் விரிகிறது. அதிலிருந்து மிகப்பெரிய பூமிப்பந்து மண்டபத்தைச் சுற்றி எஃகிப் பறந்து வருகிறது. நம் பூமியில் உயிரினங்கள் எப்படி உருவாகின, சிறுசிறு பூச்சிகளின் தோற்றம், டைனோசர்களின் வரவு, எகிப்திய உரோமப் பேரரசுகளின் பிரமாண்டமான காலங்கள் உலகப்போரும் அணுகுண்டு வீச்சும், கணணி உலகம், மாற்றுக்கிரக மனிதனென இன்றுவரை ஓடி வந்து விட்ட பூமியின் கதையை நடனமாக்கித் தருகிறது இந்த நாட்டிய நாடகம்.

**ஒரு நேரடித் தகவல்!**



வரலாற்றில் ஏற்பட்ட உன்னதமான புள்ளிகளை கலைவடிவில் தயாரிப்பது கடினம். அதற்காகவே உடைகள், ஒலி, ஒளி, நடனமென எண்ணற்ற விடயங்களை ஒன்றுடன் ஒன்று கோர்வைப்படுத்துகிறார்கள். பின்னணியில் இராட்சத அரங்குகளும் அரண்மனைகளும் மாறிக்கொண்டேயிருக்க, நடனங்களின் இசையும் ஒன்றையொன்று போட்டிபோட்டுத் துரத்த அரங்கின் சகல பக்கங்களிலும் தரைக்கீழ் மறைந்திருந்து வெளியேறும் தேகம் முழுவதும் மின்விளக்குப் பூட்டிய நடனகாரரின் ஆர்ப்பாட்டங்களுமாக கரகோசத்துடன் இரண்டரை மணி நேரங்கள் கரைந்தே போய்விடுகிறது. உச்சக் கட்ட நிகழ்வாக பெருவெடிப்போடு அரங்கு முழுவதுமே மின்விளக்குகளும் வான வேடிக்கைகளுமாக ஜொலிக்க மறுபடியும் தலைக்கு மேலாகப் பறந்து வருகிறது பூமிப்பந்து. இத்தனையும் தாண்டிய மானிட வாழ்வு மேலும் நிலைக்கவேண்டுமானால் பூமிப்பந்து அழியாது இருத்தல் அவசியம். அது பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது கதைக்கரு. இறுதியாக கலைஞர்களுக்குப் பூச்செண்டுகளை வழங்கினார்கள். அப்போது ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து, நோர்வே, அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா, ஜப்பான் என கலைஞர்களினதும் நாடுகளினதும் பெயர்ப்பட்டியல் நீண்டு சென்றது. 'தமிழீழம்' என்கிற தேசத்தின் பெயரும் இப்படியான சர்வதேச நடனங்களில் இடம்பெற வேண்டுமென்ற ஆவலைத் தாங்கியபடியே அரங்கைவிட்டு வெளியேறுகிறோம். ❖❖











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சினிமா

# மருதநாயகம் சாதனையை நோக்கி?

மீண்டும் ஒருமுறை கமலஹாசன் சினிமா உலகில் ஒரு சாதனை படைக்கப் போகின்றாரா? என்பதற்கு மருதநாயகம் படம் விடைசொல்லும். ராஜ்கமல் இன்டர் நஷனல் நிறுவனத்தினரிடம் உதித்த ஒரு கருத்தின் தோற்றம் தான் இந்த மருதநாயகம்.



அந்நியருக்கு எதிரான விடுதலைக்கான முதல் கிளர்ச்சியின் நாயகன் மருதநாயகம் வெளியுலகிற்கு பெரிதாக அறியப்படாமலே போய்விட்ட ஒரு வீரத்தியாகி. உடன் இருந்தவர்களின் வஞ்சகத்தாலும் துரோகத்தனத்தாலும் தூக்கிலிடப்பட்ட மருதநாயகத்தை வெள்ளித் திரையினூடாக உலகிற்குக் காட்டவிருக்கிறார் கமலஹாசன்.

சுமார் 275 வருடங்களிற்கு முன் நடைபெற்ற சம்பவத்தை மக்கள் திரையில் பார்க்க விரும்புவார்களா என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாக இருந்தாலும், மருதநாயகம் படம் தயாரிக்கும் முறை அது ஒரு தரமான படமாக அமையும் என்பதை முன்கூட்டியே சொல்லி வைக்கின்றது.

20 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என கமலஹாசன் எதிர்பார்க்கின்றார். துப்பாக்கிகள், கவசங்கள், கேடயங்கள், பீரங்கிகள் என சகலதும் உலோகத்தினாலும் கண்ணாடியிழையினாலும் செய்யப்பட்டன. தொழில்நுட்பத் தரம் கூடிய கமெராக்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. பரீட்சார்த்தப் படப்பிடிப்பிற்கே சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.




மருதநாயகம் படப்பிடிப்பிற்கு எவை முடியாது என்று மற்றவர்களால் கருதப்படுகிறதோ அதைக் கமலஹாசன் முடியுமெனச் செய்து காட்டுகிறார். குதிரைப்படை படப்பிடிப்பிற்குத் தேவையாக உள்ளது. அதனால் குதிரைப்படையை படப்பிடிப்பிற்குக் கொண்டுவர இந்தியக் குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெறவுள்ளார்.

மருதநாயகம் படம் 4 வருடங்களாக மிகவும் நுட்பமான முறையில் திட்டமிடப்பட்டு வருகிறது. கமலஹாசனும் இந்தப் படத்தின் நாயகன் மருதநாயகம் பாத்திரத்துடன் ஒன்றிப்போவார் என்பது உண்மை. ஏனெனில் கடந்தகாலங்களில் கமலஹாசன் ஏற்று நடித்த பாத்திரங்கள் அவ்வாறு நிரூபித்துக் காட்டியுள்ளன.

கமலஹாசன் இயக்குனராவது இதுதான் முதல் தடவை. எனினும் சர்வதேச அளவில் பாரிய தயாரிப்புக்களில் பணியாற்றிய மிகவும் அனுபவமுள்ளவர்கள் கமலஹா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சனிற்கு உதவியாளர்களாக இருப்பதோடு பிரபல இயக்குனர் ரிச்சர்ட் அட்டன்பரோவின் உதவியாளர்கள் இருவர் கமலஹாசனிற்கு உதவியாக இருப்பதும் இப்படத்தின் வெற்றிக்கு காரணிகளாக அமையப்போகின்றன.

படத்தின் இசை இன்னும் யார் என்று முடிவாகவில்லை. எனி



னும் பிரபல இசைப் பாடகி திருமதி எம். எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் ஒரு பாடலாவது பாடுவதற்குக் கேட்கப் படவுள்ளார்.

உடைகள் யாவும் நீண்டகால ஆய்வுக் குப் பின்னர் முன்னர் பாவித்தமாதிரியானவையே சரிகா கமலஹாசனின் முயற்சியில் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டைப் பொத்தான்களைக்கூட அப்படியே உருவாக்கியிருக்கிறார் சரிகா.

தேசிய விருது பெற்ற திரு சாபு சிரில் காட்சிகளை அமைக்கிறார். இந்த வரலாற்றுக் காட்சிகளின் மகத்துவத்தையும் அழகையும் கமெராவின் கண்களால் பதிவாக்குகின்றார் திரு. ரவிச்சந்திரன்.

இந்தியாவிலும் சர்வதேச ரீதியிலும் இப்படத்திற்கு கூடிய மதிப்பெண்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறார் கமலஹாசன்.

சர்வதேச சினிமா ரசிகர்களின் முன் இந்தியாவின் ஒரு அழகிய அங்கத்தைக் காட்டத் திட்டமிட்டிருக்கிறார் கமலஹாசன்.

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற மேற்கொள்ளப்பட்ட முதலாவது போராட்டத்தின் கதாநாயகனாக மருதநாயகம் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. எனினும் இது சர்ச்சைக்குரிய விடயமாக உள்ளது ஆனாலும் படைப்பு என்ற வகையிலும்சரி, திறமையின் வெளிப்பாடு என்ற வகையிலும் சரி மருதநாயகம் கமலஹாசனிற்கு மாத்திரமல்ல இந்திய சினிமாவிற்கே ஒரு மைல் கல்லாக இருக்கப் போகின்றது. **

# புலம் பெயர் நாடுகளில்
## இந்தியக் கலைஞர்கள்!
## சில நேரடி அனுபவங்கள்

### கட்டான தேகம் வேண்டுமா?
### நாக்கைக் கட்டுப்படுத்துங்கள்!

சில்க்ஸ்மிதா கூறியவை

இங்கே நீங்கள் காண்பது தமிழ்ச்சஞ்சிகை ஒன்றின் அட்டைப்படம். கவர்ச்சிக் கோலம், வலைவீசும் பார்வை, உடலழகு, போன்றவற்றிற்கு ஏங்குவோருக்காக இப்படியொரு அட்டைப்படம்.

நடிகை சில்க்ஸ்மிதா தற்கொலை செய்த பின் அவரை வைத்து பெண்ணிலைவாதம் பற்றி நிறையப்பேர் நிறையக்கோணங்களில் எழுதியிருந்தார்கள். சில்க்ஸ்மிதா எப்படிப்பட்டவர் அவருடன் நேரடியாக பழகக்கிடைத்தபோது சேகரித்த தகவல்கள் இவை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்மிதா ஓர் இசைக்குழுவுடன் ஐரோப்பாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். நேரடியாகப் பழகும்போதுதான் இவர் நாம் நினைப்பதுபோல கவர்ச்சித்தாரகை அல்ல என்பது புரிந்தது. தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற கோடம்பாக்கம் சினிமாவின் கனவுகளை தோலுரித்துக் காட்ட எச்சந்தர்ப்பத்திலும் அவர் தயங்கவில்லை. தான் ஓர் தமிழ்ப் பெண் அல்ல என்றாலும் தமிழகத்தில் ஈழத்தமிழர்கள் அனுபவிக்கும் துயரங்கள் குறித்து தான் கவலைகொண்டிருப்பதாகத் தெரிவித்தது நமக்குப் புதிதாக இருந்தது.

ஐந்து நட்சத்திரக் ஹோட்டலை இவருக்காக ஒழுங்குபடுத்தியிருந்த போதும் தரையிலேயே துண்டுவிரித்துப் படுத்திருப்பார். எத்தனை ரகமான மாமிச உணவு வகைகளைக் கொடுத்தாலும் தொடமாட்டார். சாதமும், தயிரும் மட்டுமே வேண்டுமென்று வாய்கூசாமல் கேட்பார். நான் சினிமாவிற்கு வந்தாலும் ஏழ்மையான என் வாழ்வை மறக்கவில்லை என்று கூறியதோடு மட்டுமல்லாமல் செயலிலும் காட்டினார். அவரது கவர்ச்சிக் கோணத்தை விரும்பிய பத்திரிகைகள் இப்படியான அவரின் நிஜ முகத்தைக் காட்டவிரும்பாதது ஆச்சரியமானதல்ல. சில பெண்கள் உங்கள் தேகம் இப்படிக் கட்டாக இருக்கக் காரணம் என்ன? என்று கேட்டார்கள். நான் எந்தத் தேகப்பயிற்சியுமே செய்வதில்லை. முதலில் சுவைதேடி அலையும் நாக்கைக் கட்டுப்படுத்துங்கள் தேகம் கட்டுமஸ்தாக வந்துவிடும் என்று கூறினார். சில்க்ஸ்மிதாவின் கருத்தையும் நிஜவாழ்வையும் யார்தான் ஏற்கப்போகிறார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமைப்போம் சுவைப்போம்





## சூப்

### தேவையான பொருட்கள்:—

கொத்தமல்லி— 3 மேசைக்கரண்டி
சிறியசீரகம்— 1 மேசைக்கரண்டி
மிளகாய் செத்தல் — 2
ஏலக்காய்— 4
கறுவா— சிறிதளவு
கடுகு — ஒரு தேக்கரண்டி
பெருஞ்சீரகம்— ஒரு மேசைக்கரண்டி
உள்ளி— 7 பல்
இஞ்சி —சிறுதுண்டு
வெங்காயம்—பெரியது ஒன்று
மைசூர் பருப்பு— 4 மேசைக்கரண்டி
ரம்பை— சிறு துண்டு
பச்சைமிளகாய்—நான்கு
தக்காளிப்பழம்—இரண்டு
சலரின் இலை— தேவையான அளவு

### செய்முறை—

கொத்தமல்லி, சிறியசீரகம், செத்தல்மிளகாய், மைசூர் பருப்பு, ஏலக்காய், கறுவா போன்றவற்றை முதலில் நன்றாக அரைத்து வைக்கவும். அடுப்பில் பாத்திரத்தை வைத்து சிறிதளவு எண்ணை விட்டு கொதித்ததும் கடுகு, பெருஞ்சீரகம், உள்ளி இஞ்சி அரைத்து, வெங்காயம், பச்சைமிளகாய், ரம்பை, தக்காளி போன்றவற்றைப் போட்டு வதக்கவும். நன்கு வதங்கியதும் 4 கப் தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். மாமிசம் சாப்பிடுபவர்கள் விரும்பினால் இறைச்சி, இறைச்சி எலும்பும் போட்டு நன்றாக கொதித்ததும், அரைத்த பவுடரை போட்டு சிறிது கொதித்ததும் பின் சலரின் இலையை போட்டு சிறிதளவு பாலும், தேசிக்காய் புளியும் விட்டு இறக்கவும். மிகவும் சுவையாக இருக்கும்.

மூன்று பேர்களுக்கு அளவான

## மசாலா உருளைக் கிழங்குப் பூரி



### தேவையான பொருட்கள்:—

கோதுமை மா — 100 கிராம்
ஆட்டா மா — 100 கிராம்
உருளைக்கிழங்கு — 2 சிறியது
சீரகம் — 1/4 தேக்கரண்டி
வெங்காயம் — 50 கிராம்
கொத்தமல்லிக்கீரை — 1/4 கட்டு
கரம் மசாலா — 1/2 தேக்கரண்டி
மிளகு(பொடித்தது) — 1/2 தே. க
எண்ணெய் — பொரிப்பதற்கு
உப்பு— தேவையான அளவு

### செய்முறை—

இருவகை மாவையும் ஒன்றாக்கி நன்கு பிசைந்து கொள்ளவும்.

உருளைக் கிழங்கை வேகவைத்து நன்றாக மசித்து சலித்த மாவுகளுடன் சேர்க்கவும். சீரகம், கரம் மசாலா, சிறியதாக நறுக்கிய கொத்தமல்லி, உப்பு, எண்ணெய் முதலியவற்றைச் சேர்த்து சப்பாத்தி மாவுபோல் பிசைந்து கொள்ளவும். பிசைந்த மாவை 12 உருண்டைகளாகப்பிரித்து சிறு வட்டமாகத் திரட்டி எண்ணெயில் பொன்கிறமாகப் பொரித்து எடுக்கவும். பூரி தயாராகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SIVARAJ ENTERPRISES

*Grocery & News Agent*

**We sell Indian, Sri Lanka and Continental groceries.**



**உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள்.**

இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஓடியோ வீடியோகள், சீடிக்களுக்கு Sri Lankan Food Items, Fish, Fresh vegetables, Video, Audio & CD.


**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள், கட்டாயம் மீண்டும் வருவீர்கள்.**

## We also sell

**Rice Cooker, Vedio, Audio, Cassettes & CD in Tamil, and Singalam**



**114 Tooting High Street,**
**London SW17 0RR**
**Tel: 0181 682 1677**
**Fax: 0181 767 0167**
**Mobile: 0850 84 62 38**



# ஞானம் சென்ரர்






சர்வதேசத் தொடர்புகளுக்கான
நிமிடங்களை
மிக அதிகமாகத் தருகிறோம்

| | | |
|---|---|---|
| இந்தியா | 36 | நிமிடம் |
| கனடா | 100 | நிமிடம் |
| தாய்லாந்து | 27 | நிமிடம் |
| ஹொங்கொங் | 45 | நிமிடம் |
| பிரான்ஸ் | 135 | நிமிடம் |
| இலங்கை | 30 | நிமிடம் |
| சுவிஸ் | 70 | நிமிடம் |
| மொறிசியஸ் | 35 | நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 | நிமிடம் |
| பிரித்தானியா | 100 | நிமிடம் |
| அமெரிக்கா | 100 | நிமிடம் |
| ஜேர்மனி | 75 | நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 | நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 | நிமிடம் |
| அல்ஜீரியா | 55 | நிமிடம் |
| மொரோக் | 55 | நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 | நிமிடம் |




தொடர்புகளுக்கு

## GNANAM TELECOM CENTER

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**
**Tel: 01 46 07 09 36 Fax: 01 46 07 00 44**
**M<sup>O</sup>: Lachapelle / Gare du Nord**

பாரிஸ் 10-ல்
83, Rue du Fg. Saint Denis.
75010 Paris.
MO: Chateau d' eau

பாரிஸ் 11-ல்
175, Rue de St. Maur.
75011 Paris.
Tel: 01 43 38 22 98
MO: Belleville

பாரிஸ் 20-ல்
38, Rue de
Belleville.
75020 Paris.
Tel: 01 40 33 36 72
MO: Concourt

பாரிஸ் 18-ல்
13, Rue de Suez.
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
MO: Chateau Rouge

வெகுவிரைவில் சுவிஸ், லண்டனில் எமது சேவை ஆரம்பமாகின்றது

குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டும்